வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 02.07.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 211 | பக்கங்கள் : 16




# டெல்டாவை தடுக்க வருகின்றது புதியதொரு சுகாதார வழிகாட்டி

## திங்கட்கிழமை வெளியாகும் என தகவல்

கொழும்பு, ஜூலை 02

இலங்கை முழுவதற்குமான புதிய சுகாதார வழிகாட்டி ஒன்றை பொதுச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடவுள்ளார். டெல்டா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், பாரிய விளைவுகள் ஏற்படும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ள பின்னணியிலேயே இந்த புதிய சுகாதார வழிகாட்டி வெளியிடப்படவுள்ளது. 15



## 1,815 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூலை 02

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,815 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர் 15

## தன்னை தானே சுட்டு உயிர்மாய்த்த பொலிஸ் அலுவலர்

முல்லைத்தீவு, ஜூலை 02

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நேற்று இந்த சம்பவம் நடந்தது. கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 45 வயதுடைய சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

குடும்பப் பிரச்னை காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. 15

## யாழ்ப்பாணத்தில் நேற்றுவரை 41,771 பேருக்கு 2ஆவது ‘டோஸ்’

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ்ப்பாணத்தில் நேற்று வரை 41 ஆயிரத்து 771 பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டதாக மாவட்ட அரச அதிபர் க. மகேசன் நேற்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா தொற்று தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. இவர்களுக்கான இரண்டாவது டோஸ் தடுப்பூசி வழங்கும் திட்டம் கடந்த திங்கட்கிழமை 15

## மேலும் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றினால் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 99ஆக உயர்வடைந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை 15

## கொரோனா தொற்றால் மேலும் 43 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 02

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மேலும் 43 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் மரணமடைந்தவர் 15

## நெடுந்தீவு கடலில் மீன்பிடிக்க சென்றவரை காணவில்லை

### உறவினர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 02

நெடுந்தீவில் மீன்பிடிக்கக் கடலுக்குச்சென்ற மீனவர் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

இது தொடர்பில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு 8ஆம் வட்டாரத்தைச் 15

## அபிவிருத்திக்கு பதிலாக நாட்டை அழிக்கின்றது அரசு



### சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 02

அரசு அபிவிருத்திக்குப் பதிலாக நாட்டுக்கு அழிவைக் கொண்டு வந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். 15

## தம்பாட்டி கிராமம் நேற்றுடன் முடக்கம்!

யாழ்ப்பாணம், ஜூலை 02

ஊர்காவற்றுறையின் - தம்பாட்டி கிராமம் நேற்று மாலை 6 மணி முதல் முடக்கப்பட்டது. அந்தப் பகுதியில் இயங்கும் நண்டு தொழிற்சாலையில் 10 தொழிலாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமையை அடுத்தே இந் 15




### எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து;

## இராமேஸ்வரம் மீனவர்கள் பிடித்த மீன்கள் குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு

இராமேஸ்வரம், ஜூலை 02

இலங்கையில் சரக்கு கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தின் எதிரொலியாக இராமேஸ்வரம் மீனவர்கள் பிடித்து வந்த மீன்களை மண்டபம் மத்திய மீன் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

இலங்கை தலைநகர் கொழும்பு துறைமுகத்துக்கு அண்மையில் நிறுத்தப்பட்டிருந்த சிங்கப்பூர் சரக்கு கப்பலில் கடந்த மே மாதம் 23 ஆம் தேதி ஏற்பட்ட தீ விபத்தில் சரக்கு கப்பலில் இருந்த கொள்கலன்கள் தீயில் எரிந்து நாசமானது.

இந்தத் தீ விபத்தில் கப்பலிலிருந்த கொள்கலன்களில் இருந்த அழகு சாதனப் பொருட்கள் மற்றும் இரசாயன பொருட்கள் 15

## இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு நூல் வெளியீட்டு விழா. அப்போது இளம் பெண் எழுத்தாளராக இருந்து இன்று பிரபல எழுத்தாளராக இருக்கும் ஒருவரின் முதலாவது சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அது.

ஒரு பத்திரிகை ஆசிரியர் நூலைப் பாராட்டி பேசினார். வழக்கம்போல நாற்பது ஐம்பது பேர்தான் கூட்டத்தில் இருந்தனர்.

அந்த ஆசிரியர், எழுத்தாளரின் படைப்புக்களைப் பற்றி சொல்வதற்கு முதல் இப்படித்தான் ஆரம்பித்தார்.

“நான் இதற்கு முன்னர் இவரின் கதைகளைப் படித்த தில்லை. இப்போது இந்த நூலை அவர் என்னிடம் தந்த போதுதான் படித்தேன். அற்புதமாக எழுதியிருக்கிறார்....”, இப்படித்தான் அந்தப் பத்திரிகை ஆசிரியர் தனது பேச்சை ஆரம்பித்தார்.

தொடர்ந்து அந்த சிறுகதைத் தொகுதியில் உள்ள ஒன்றி ரண்டு கதைகள் பற்றி புகழுரை ஆற்றிவிட்டு வந்து முன்வரி சையில் இந்த ஊர்க்குருவிக்கு அருகே வந்து அமர்ந்தார். அவர் காதுகளுக்குள் போய் சொன்னேன். “அண்ணே, உங்கட பத்திரிகையிலேயே அவரின் கதைகள் பல வெளி வந்திருக்கின்றதே. ஏன் அந்தக் கதைகள்கூட இந்த நூலில் இடம்பெற்றிருக்கின்றனவே” என்று.

அவர் நெளிந்தார்.

தனது பத்திரிகையில் தானே பிரசுரத்திற்கு கொடுத்த கதைகளை அவர் வாசிக்காமல் கொடுத்திருப்பார் என்று நம்பவில்லை. ஆனால், அவர் அங்கே அந்த எழுத்தாளரை முகத்திற்கு நேரே புகழ்வதற்காகத்தான் அப்படி சொல்லியி ருக்க வேண்டும். இதைத்தான் நம்மவர்கள், ‘பொல்லைக் கொடுத்து அடிவாங்குவது’ என்று சொன்னார்களோ தெரியவில்லை.

கடந்த தேர்தலுக்குப் பின்னர் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணம் அவர்களை அவரின் உண்மையான முகத்தை தரிசிக்க முடிய வில்லை என்று இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப் பிட்டாகிவிட்டது.

அண்மையில் மருதங்கேணியில் வீதி அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர் ஒருவரின் படத்தை தனது சமூக வலைத்தளம் ஒன்றில் பதிவிட்டு, அவரை சீனப்பிரஜை என்றும் நமது பகுதியில் பலர் வேலையில்லா மல் இருக்கும்போது எதற்கு சீனப் பிரஜை ஒருவரை வேலைக்கு அமர்த்த வேண்டும் எனவும் கேள்வி எழுப்பி யிருந்தார்.

அவர் சொன்ன அந்தத் தொழிலாளி சீனர் அல்ல என்பதும் அவர் அம்பாறையைச் சேர்ந்த ஒருவர் மட்டுமல்ல, வடமராட்சியின் மருமகன் என்றும் பின்னர் தெரியவந்தது. இதனையடுத்து அவர் அந்தப் பதிவை நீக்கியிருந்தார்.

இது சுமந்திரனின் தடுமாற்றத்தையே பிரதிபலித்தது. தான் சொல்கின்ற ஒரு விடயத்திற்கு எத்தனை எதிர்ப்பு வந்தாலும் அந்தக் கருத்தில் திடமாக இருப்பவர் என்ற பெருமையைப் பெற்றிருந்தவர் சுமந்திரன். ஏன் இப்போது இப்படி தடுமாறுகிறார் என்பது அவருக்கே வெளிச்சம்.

அதைவிடக் கவனிக்கத்தக்கது, பூநகரி பிரதேசத்தில் கடலட்டை பிடிப்பதற்கு சீனர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டதைக் கண்டித்து அவர் அறிக்கை விட்டது. அதனை இப்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணி செயலாளர் கஜேந்திரனும் கண்டித்திருக்கிறார். ஏன் சிறிதரனும் களவிஜயம் செய்து கண்டித்திருக்கிறார்.

கண்டிக்க வேண்டிய ஒன்றுதான். ஆனால், அது முதல் தடவையாக நடந்திருந்தால்.

எந்த அரசாங்கம் விழுந்துவிடக்கூடாது என்று தமது முழுப்பலத்தையும் கொண்டு தாங்கிப் பிடித்தார்களோ அந்த நல்லாட்சி அரசின் காலத்தில் மறவன்புலவிலும் அரியாலை யிலும் சீனர்கள் கடலட்டை பிடிக்கத் தொடங்கியது தெரிந்திருக்காதது வியப்புக்குரியது.

யூ. என். பி. அரசு என்ன செய்தாலும் அதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பதும், ராஜபக்ஷ அரசில் என்ன நடந்தா லும் எதிர்ப்பதும் அரசியல் ஆகாது. அதைவிடுத்து, நமது கடல் வளத்தை சரியாகப் பயன்படுத்த நமது மக்களை, குறிப்பாகப் புலம்பெயர் முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டும்.

கொரோனா தடுப்பூசிக்கு புலம்பெயர் தமிழர்களின் உதவியைப் பெறமுடியும் என்றால், முதலீடுகளுக்கு ஏன் அவர்களைப் பயன்படுத்த முடியாது?

**- ஊர்க்குருவி**

# யாழில் கொரோனாவால் இதுவரை 95 பேர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜுலை 2

கொரோனாத் தொற்றி னால் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 95 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என யாழ்.மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

குடாநாட்டில் இதுவரை 5ஆயிரத்து 362 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் களில் 4 ஆயிரத்து 275 பேர் முழுமையான குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

4 ஆயிரத்து 821 குடும் பங்களைச் சேர்ந்த 14 ஆயி ரத்து 366 பேர் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ள னர்.

தற்போது யாழ்.மாவட் டத்தில் ஐந்து கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் நிலவரத் தின் படி 33 ஆயிரத்து 382 பேருக்கு கொரோனா தடுப்பூசி கள் செலுத்தப்பட்டுள்ளன. ஒவ்வாமை உள்ளவர்களுக்கு சனிக்கிழமை ஊசி செலுத்துவ தற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது - என்றார்.(அ-3)

## கல்மடுவில் காட்டு யானைகள் அட்டகாசம்

கிளிநொச்சி, ஜுலை 02

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட் பட்ட கல்மடு நகர் பகுதியில் தினமும் காட்டு யானைகளின் அட்டகாசத் தின் மத்தியில் தாம் பல துன்பங்களை அனுபவித்து வருவதாக மக்கள் குற்றச் சாட்டை முன்வைத்துள்ள னர் .

தற்போது நாட்டில் பயணத் தடை நீக்கப்பட்டி ருந்தாலும் தமது வாழ்வாதா ரத்தை மேம்படுத்தும் நோக் கில் சிறு தானியச் செய்கை யாக மரவள்ளி, வாழை,பலா என பல பயிர்களை பயிரிட் டுள்ளபோதும் தினமும் காட்டு யானைகள் பேர ழிவை ஏற்படுத்தி வருவதா கவும், ஊருக்குள் நுழையும் காட்டு யானைகள் பயன் பெறக்கூடிய பல பயிர்களை அழித்துள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந் தப்பட்ட அதிகாரிகள், வன ஜீவராசிகள் திணைக்களத்தி னர் இது குறித்து எவ்வித நட வடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம்சாட்டப்பட்டுள் ளது.

## மருதனார்மடத்தில் வீட்டின்மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஜுலை 02

மருதனார்மடம் சந்தைக்கு முன்பாக உள்ள வீடு ஒன்றுக் குள் புகுந்த குழு ஒன்று அங்கிருந்தவர்களை அச்சு றுத்தியது. அத்துடன் ஒரு வரைத் தாக்கியதுடன் வீட்டி லிருந்த பெறுமதியான பொருட்களையும் அடித்து உடைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

6 பேர் கொண்ட குழுவே இந்த சம்பவத்தில் ஈடுபட்ட தாக கூறப்பட்டது. சுன்னா கம் பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

### கல்வி tv CHANNEL-1 — 02.07.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி tv CHANNEL - 2 — 02.07.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
02.07.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# அன்று இந்தியா; இன்று சீனா நாளை...!

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சீனர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு வருமாறு, மகா சங்கத்தினரையும் இராணுவத்தினரையும் அழைத்திருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் இந்த அழைப்பை விடுத்திருக்கின்றார். இதனைப் பார்க்கும்போது 1987 இந்திய - இலங்கை ஒப்பந்த காலமே நினைவுக்கு வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் இன்றைய தலைவரான சஜித்தின் தந்தையும், முன்னாள் ஜனாதிபதியுமான காலம் சென்ற, ரணசிங்க பிரேமதாஸ - இந்தியாவிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு அணிதிரளுமாறு அன்று அறைகூவல் விடுத்திருந்தார். இந்தியப் படைகளை இலங்கை மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்காக எந்த எல்லைக்கும் போவதற்குத் தயாராக இருந்தார்.

“நான் விஷம் அருந்தி இறப்பேன்”, என்று கூறி, பி. பி. சிங் தலைமையிலான இந்திய அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்தியப் படைகளை எப்படியாவது வெளியேற்ற வேண்டும் என்பதற்காக, தங்களின் பரம வைரிகளான விடுதலைப் புலிகளுடன் பின் கதவு உறவையும் ஏற்படுத்திக் கொண்டார். எதிரிக்கு எதிரி நண்பன் என்பதுபோல், இந்தியாவை எப்படியாவது வெளியேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த விடுதலைப் புலிகளின் தலைமை, பிரேமதாஸவின் கரங்களைப் பற்றிக்கொண்டது.

அந்த நேரத்தில், விடுதலைப் புலிகள் அமைப்பு - “புலிகள் - இலங்கை அரசாங்கம் பேச்சு - விடுதலைப் புலிகளின் ஒரு தந்திரோபாய நகர்வு” (Tigers -Sri Lanka Government Talks – a tactical action by liberation Tigers) - என்னும் சிறுநூலைப் பிரசுரம் செய்திருந்தனர். குறித்த நூலில் - தங்களின் செயலை மாவோவிற்கும் அவரின் எதிரியான சியாங்கேய் சேக்கிற்கும் இடையிலான கைகுலுக்கலுடன் ஒப்பிட்டிருந்தனர். இது தொடர்பான விபரங்களை விடுதலைப் புலிகளால் மாமனிதர் கௌரவம் வழங்கப்பட்ட சிவராம்தான் தனது கட்டுரையொன்றில் பதிவு செய்திருக்கின்றார்.

ஆனால், இன்றோ நிலைமைகள் தலைகீழாகி இருக்கின்றன. எந்த இந்தியாவைத் தங்களின் எதிரிகள் என்று கூறி, விடுதலைப் புலிகள் வெளியேற்றினரோ- இன்று அந்த இந்தியாவின் தயவை நாடித்தான் ஈழத் தமிழரின் அரசியல் தலைவர்கள் காத்திருக்கின்றனர். புதுடில்லியின் கடைக்கண் பார்வைக்காகக் காத்திருக்கின்றனர். ஏனெனில், வேறு தெரிவுகள் எதுவும் தமிழர்களிடம் இல்லை. மறுபுறமோ, இந்தியாவை வெளியேற்ற புலிகளுடன் கைகோத்த பிரேமதாஸவின் மகன் தலைமையிலான எதிர்க்கட்சியோ, சீனாவிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு அணிதிரளுமாறு அழைப்புவிடுக்க வேண்டியளவிற்கு நிலைமைகள் மாறியிருக்கின்றன. அன்று இந்தியா நாட்டை விழுங்கிவிடப் போவதாகக் கூறிய சிங்கள ஆளும் பிரிவினரில் ஒரு பகுதி இப்போதோ, சீனா என்னும் சித்தப் பிரமைக்குள் சிக்குண்டு கிடக்கின்றது.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதற்காக தங்களின் மூளையை சதா தீட்டிக் கொண்டிருந்தவர்கள் இன்று, பலம்பொருந்திய நாடுகளின் பிடிக்குள் சிக்குண்டு மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்றனர். கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சட்ட மூலத்திற்காக தங்களுக்குள் முட்டி மோதிக் கொள்ளும் சிங்கள ஆளும் வர்க்கமோ, அரசியல் யாப்பின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டிருக்கும் அதிகாரங்களைக்கூட, தமிழ் மக்கள் முழுமையாக அனுபவித்து விடக்கூடாது என்பதற்காக அல்லும் பகலும் தங்களின் மூளையை கசக்கிக் கொண்டிருக்கின்றனர். இலங்கை தீவை எவரும் அனுபவிக்கலாம். எந்த நாடும் சூறையாடலாம் ஆனால், இந்த தீவின் சொந்தக்காரர்களான தமிழ் மக்கள் மட்டும், எந்தவோர் உரிமையையும் அனுபவித்துவிடக்கூடாது.

இந்த சிங்கள - பௌத்த மேலாதிக்க மனோநிலைதான் இன்று, இந்தத் தீவு பலம்பொருந்திய நாடுகளின் அதிகாரப் போட்டிக்குள் சிக்குண்டு தடுமாறிக் கொண்டிருப்பதற்குக் காரணம். இனி எவர் அதிகாரத்தில் அமர்ந்தாலும் இந்த நிலைமையைப் பெரியளவில் சரி செய்ய முடியாது. ஏனெனில், சரி செய்யக் கூடிய எல்லைகள் அனைத்தையும் நாடு கடந்துவிட்டது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இலங்கைத் தீவு ஏதோவொரு வகையில் இந்திய - சீன முறுகல் நிலையின் ஓர் அங்கமாக இருக்கத்தான் போகின்றது.

# சீனாவின் பிடியிலிருந்து விலக மகா சங்கத்தினரை நாடும் ஐக்கிய மக்கள் சக்தி !

- அலசுவது **இராஜதந்திரி** -

ஒரு நாட்டின் இறைமையை பாதுகாக்க ஆயுதப் படையினரின் சேவையை நாடுவதே நடைமுறையாகும். ஆனால், இலங்கையின் இறைமையைப் பாதுகாக்க பௌத்த மகா சங்கத்தினருக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான துஷார இந்துநில்.

அண்மைக்காலங்களில் நாட்டின் ஆட்சியாளர்கள் மீது பௌத்த மகா சங்கத்தினரின் அதிருப்தி அதிகரித்து வருவதையே அவதானிக்க முடிகின்றது. அஸ்கிரிய பீடாதிபதி உட்பட பல பௌத்த குருமார்கள் வெளிப்படையாகவே ஆட்சியாளர்கள் மீது கண்டனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

நாட்டின் பொருளாதார நிலவரம் மிக மோசமான நிலையிலிருப்பது கண்கூடு. இதுதவிர, நாட்டின் நீதித்துறைகூட ‘எடுப்பார் கைபிள்ளையாக’ இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. பட்டப்பகலில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவரையே சுட்டுப் படுகொலை செய்து மரண தண்டனைக் கைதியாக இருந்த துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டமை நாட்டில் அராஜகம் எவ்வளவு தூரம் தலைவிரித்தாடுகின்றது என்பதற்கு நல்ல உதாரணமாக இருக்கின்றது.

**மகா சங்கத்தினருக்கு அழைப்பு**

இத்தகைய அசாதாரணமான ஒரு பின்னணியிலேயே நாட்டைப் பாதுகாக்க முன்வருமாறு பௌத்த மகா சங்கத்தினரிடம் ஐக்கிய மக்கள் சக்தியினர் அழைப்பு விடுத்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியினர் சீனாவின் தலையீடு இலங்கையில் அதிகரித்து வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீனாவைப் பொறுத்தவரை நிலப்பிரபுத்துவ ஆட்சி நீண்ட நெடுங்காலம் அந்நாட்டில் நிலவியிருந்தது. ஆனால், ரஷ்யப் புரட்சியின் தாக்கம் சீனாவில் பிரதிபலிக்கத் தொடங்கியதை அடுத்து ரஷ்யப் புரட்சியின் மார்க்ஸிஸ - லெனினிஸ கோட்பாடுகளால் கவரப்பட்ட அன்றைய சீன தொழிலாளர் இயக்கம், சீன கம்யூனிஸ்ட் கட்சியை 1921ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஸ்தாபித்திருந்தது.

சீனாவில் நிலப்பிரபுத்துவ ஆட்சி முடிவுக்கு வந்து கம்யூனிஸ்ட் ஆட்சியில் சமத்துவமான சமூக அமைப்பு உருவாகத் தொடங்கியபோதிலும் சீன கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் பெரிதும் வெளி உலக மற்றும் மேற்கத்தேய அரசியல் செல்வாக்கிலிருந்து சீனாவைக் காப்பதிலேயே முனைப்பாக இருந்தனர்.

**‘மூங்கில் திரை நாடு’**

இதன்காரணமாக கம்யூனிஸ போக்கைக் கொண்டிருந்த அன்றைய சோவியத் ரஷ்யா ‘இரும்புத்திரை’ நாடு என்றழைக்கப்பட்டிருந்தது. அதேசமயம் சீனா ‘மூங்கில் திரை’ நாடென சர்வதேச சமூகத்தினால் அழைக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் சீனாவில் ஒரு புதிய அரசியல் மறுமலர்ச்சியின் அவசியம் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் உணரப்பட்ட நிலையில் அங்கு இளஞ்சந்ததியினர்கூட கிளர்ந்தெழும் சூழல்களே வலுவடைய ஆரம்பித்திருந்தன.

இத்தகைய சூழ்நிலையிலேயே சோஷலிஸ முற்போக்கு சிந்தனையாளரான டெங் சியாவோ பெங் சீனாவில் புதிய மறுமலர்ச்சித் திட்டங்களை ஆரம்பித்து சர்வதேச சமூகத்துடன் சீனா தனது தனித்துவத்தை இழக்காத வகையில் திறந்த பொருளாதார நடைமுறைகளை ஆரம்பித்தார். இதன் விளைவாகவே இன்று சீனா அபரிமிதமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டுள்ளது.

1921ஆம் ஆண்டு ஜூலை மாதம் தோற்றம் பெற்ற சீனாவின் கம்யூனிஸ ஆட்சி இந்த ஆண்டு தனது நூற்றாண்டை பூர்த்தி செய்கின்றது. இந்த நூறாண்டு காலத்தில் கடந்த முப்பது வருடத்திலேயே சீனா பொருளாதர ரீதியாக சர்வதேச சமூகத்தை வியப்பிலாழ்த்தும் விதத்தில் அபார வளர்ச்சி கண்டுள்ளது.

**நெப்போலியனின் தீர்க்க தரிசனம்**

சீனாவின் வளர்ச்சி அபாரமானதாக இருக்குமென்பதை பிரெஞ்சு சக்கரவர்த்தியாக 1799ஆம் ஆண்டு முதல் 1804ஆம் ஆண்டு வரை ஆட்சியிலிருந்த போனபார்ட் நெப்போலியன் ஊகித்திருந்தார்.


தனது ஊகத்தை நெப்போலியன் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: ‘சீனா ஓர் உறங்கும் வேதாளம். அது விழித்துக் கொண்டால் முழு உலகத்தையும் உலுப்பிவிடும்’. எனவே, நெப்போலியன் குறிப்பிட்டுள்ளமை தற்போது நிதர்சனமாகியுள்ளதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் சீனாவின் ‘வேதாள தாண்டவ’ பிடியில் இலங்கை சிக்கியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இந்த வேதாளப் பிடியிலிருந்து விடுபடவே பௌத்த மகா சங்கத்தினரை களமிறங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால், இலங்கையில் சீனாவின் ‘வேதாளப்பிடி’ என்பது கடன் உதவி மற்றும் அதற்கான கட்டுமானப் பணிகள் என்ற வகையில் விரிவானதாகவே இருக்கின்றது. இந்த நிலையில் சீனா அதன் கம்யூனிஸ ஆட்சியின் நூறாவது ஆண்டை இவ்வருடம் பூர்த்தி செய்யும் நிலையில் அதன் வல்லாதிக்க விஸ்தரிப்புக்கு தெற்காசியாவில் சிக்குண்ட ஒரு நாடாகவே இலங்கை விளங்குகின்றது.

●

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பதவி, சம்பளம் உயரும். குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். நட்பு சிறப்பாக அமையும். பாராட்டுப் பெறுவீர்கள். பணம் வரும். தொழில் தொடங்க வாய்ப்பு வந்தால் யோசித்து முடிவெடுங்கள்.

**இடபம்**
எடுத்துக்கொண்ட விஷயத்தில் முனைந்து முன்னேறுவீர்கள். திருமணம் கைகூடும். குழந்தைகளுக்கு நன்மை ஏற்படும். தைரியம் கூடும். அலுவலகப் பணி சிறப்பாக நடக்கும்.

**மிதுனம்**
உடல் நலக்கோளாறுகள் நீங்கி மருத்துவ செலவுகள் குறையும். மேலதிகாரிகளிடம் பேசும்போது அறிவாற்றல் வெளிப்படும். பாஸ்போர்ட், வீஸாவில் இருந்த சிக்கல்கள் தீரும்.

**கடகம்**
நிம்மதி கிட்டும் நாள். சகாக்களின் அன்பு கிடைக்கும். வம்பில் மாட்டும் செய்கை எதுவும் செய்யாமல் தப்பிவிடுவீர்கள். நேற்றைய தொல்லைகள் எல்லாம் மறைந்து நிம்மதி அடைவீர்கள்.

**சிம்மம்**
ஒவ்வொரு பேச்சிலும், செயலிலும் கவனமாக இருப்பது நல்லது. சமூக அந்தஸ்து உயரும். உறவினர்கள் தொடர்பு கொள்வர்.மற்றவர்களுக்கு உங்கள் மீது இருந்த கோபம் குறையும்.

**கன்னி**
பணிச்சுமை குறையும். மனக்கவலை நீங்கும். தேவை ஏற்படும்போது நண்பருக்கு உதவிக்கரம் நீட்டுவீர்கள். சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்

**துலாம்**
அவசியமற்ற விஷயங்களை நினைத்து குழப்பம் அடையாதிருங்கள். பயம் நீங்கிவிடும். சொந்த முயற்சியால் பணவரவு உண்டு. யாரோ ஒருவரால் ஆதாயமடைவீர்கள். காதல் பிறக்கும்.

**விருட்சிகம்**
அலுவலக வேலைகளில் கவனமாக இருந்து நிம்மதி அடைவீர்கள். வழக்குகள் இருந்தால், சாதகமாக முடியும். தந்தை நலமடைவார். மனதிற்கு இனிய சம்பவம் நடக்கலாம்.

**தனுசு**
இழந்த உறவு ஒன்றைப் புதுப்பித்துக் கொள்வீர்கள். மன நிம்மதி கூடும். உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்.பணியில் சவால் ஒன்றைச் சந்தித்து வெற்றி பெறுவீர்கள்

**மகரம்**
வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவிகரமாக இருப்பர். யாரையும் அதிகம் நம்பாதீர்கள். பொழுது போக்கு அதிகரிக்கும். தந்தை, தாயுடன் இருந்து வந்த மன வருத்தங்கள் நீங்கும்.

**கும்பம்**
வரவேண்டிய பாக்கியை கறாராகப் பேசி வசூல் செய்வீர்கள். குடும்பத்தில் சிகிச்சை பெற்று வந்தவர்கள் குணமடைவார்கள். கடந்த கால மனக்குறைகள் மெல்ல நீங்க ஆரம்பிக்கும்.

**மீனம்**
மனம் நிறைவடையும். உறவினரைச் சந்தித்து மகிழ்வீர்கள். புதிய நட்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டாம். பணியிடத்து நுணுக்கங்களை அறிவீர்கள். நிம்மதியான நாள்.

# சசிகலா 1,000 பேரிடம் பேசினாலும் எங்களுக்கு கவலையே இல்லை

## அவர் கட்சியிலும் இல்லை என்கிறார் எடப்பாடி

சென்னை, ஜுலை, 02

"சசிகலாவுக்கும் அ.தி.மு.க.வுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சசிகலா 10 பேர் அல்ல 1,000 பேரிடம் பேசினால்கூட எங்களுக்கு கவலை இல்லை" என அ.தி.மு.க.வின் இணை ஒருங்கிணைப்பாளரும் தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் ஓமலூரில் அ.தி.மு.க நிர்வாகிகளுடன் அக் கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை மேற்கொண்டார். அதன்பிறகு நிருபர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:-

"தமிழகம் முழுவதும் கடுமையான தடுப்பூசி தட்டுப்பாடு உள்ளது. மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். ஆகவே, தடுப்பூசி மையம் தொடர்பான விவரங்களை அரசு முன் கூட்டியே அறிவிக்க வேண்டும். எண்ணிக்கைக்கு ஏற்றவாறு தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.



சசிகலா அ.தி.மு.க.வில் இல்லை, சசிகலாவுக்கும் அ.தி.மு.க.விற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்ற அவர், 10 பேர் அல்ல ஆயிரம் பேரி டம் பேசினால்கூட எங்களுக்கு கவலை இல்லை. குறை சொல்வதை விட்டு விட்டு தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றுங்கள்" எனவும் கூறினார்.

# தமிழக ஊரடங்கு மேலும் தளரும்? முதலமைச்சர் இன்று ஆலோசனை



சென்னை, ஜுலை 02,

தமிழகத்தில் கொரோனா தொற்று எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், புதிய தளர்வுகளுடன் ஊரடங்கை நீட்டிப்பது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆலோசனை நடத்துகிறார். இன்று நடைபெறும் ஆலோசனையை அடுத்து புதிய தளர்வுகள் குறித்து முதலமைச்சர் அறிவிப்பார்.

தமிழகத்தில் கடந்த மே மாதம் ஒரே நாளில் அதிக பட்சமாக கொரோனா தொற்று பரவல் 36 ஆயிரம் வரை இருந்தது. இதையடுத்து, தமிழகத்தில் கொரோனா தொற்றை குறைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிரடி நடவடிக்கைகள் எடுத்தார்.

இதன்படி, கடந்த மே 24ஆம் திகதி முதல் ஜுன் 7ஆம் திகதி வரை தொடர்ந்து இரண்டு வாரங்கள் எந்தவித தளர்வுகளும் இல்லாத முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக தமிழகத்தில் கொரோனா தொற்று படிபடிப்படியாகக் குறையத் தொடங்கியது.

இதையடுத்து, தமிழக அரசு படிப்படியாக தளர்வுகளை அறிவித்து வருகிறது. குறிப்பாக, பாதிப்பு வாரியாக மாவட்டங்களை 3 வகையாக பிரித்து தனித்தனியாக தளர்வுகளை அறிவித்துள்ளது.27 மாவட்டங்களில் பேருந்து உள்ளிட்ட அனைத்து சேவைகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது அமுலில் இருக்கும் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு ஜுலை 5 ஆம் திகதி காலை 6 மணியோடு நிறைவடையவுள்ளது. இந்த நிலையில், ஊரடங்கை நீடிப்பது குறித்து முதல்வர் ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் இன்று ஆலோசனை மேற்கொள்ளவுள்ளார். மருத்துவக் குழுவினருடன் ஆலோசனை நடைபெறவுள்ளது. இந்த முறை எஞ்சியுள்ள 11 மாவட்டங்களுக்கு கூடுதல் தளர்வுகள் அளிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

# ஒன்றிய அரசு என மத்திய அரசை அழைப்பதற்குத் தடை இல்லை

## உயர் நீதிமன்ற மதுரை கிளை நேற்று தீர்ப்பு

மதுரை ஜுலை, 02

மத்திய அரசை ஒன்றிய அரசு என அழைப்பதற்கு தடை விதிக்க முடியாது எனக் கூறி, ஒன்றியம் என்ற வார்த்தையை பயன்படுத்த இடைக்கால தடை விதிக்க கோரிய மனுவை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நேற்று தள்ளுபடி செய்தது.

தி.மு.க., ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து முதல்வர் ஸ்டாலின், அக்கட்சி அமைச்சர்கள் உட்பட கட்சியினர் அனைவரும் மத்திய அரசை ஒன்றிய அரசு என்றே அழைத்து வருகின்றனர்.

இதற்கு பா.ஜ.க., உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால், முதல்வர் ஸ்டாலின் சட்ட சபையில், "இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் உள்ளதுபடி ஒன்றிய அரசு என்றே கூறுவோம்" என அழுத்தமாக கூறினார்

இந்நிலையில், ஒன்றிய அரசு என்ற வார்த்தையை பயன்படுத்த இடைக்கால தடை விதிக்க கோரி பழனியை சேர்ந்த ராமசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தார்.

இதனை விசாரித்த நீதிபதிகள், "முதல்வரும் மற்ற அமைச்சர்களும் இவ்வாறு தான் பேச வேண்டும் என உத்தரவிட முடியாது.

எனவே, மத்திய அரசை ஒன்றிய அரசு என அழைப்பதற்கு தடை விதிக்க முடியாது" எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்தனர்

# குடாநாட்டில் வன்முறைகளை தடுக்க பொலிஸாரின் ரோந்து பணி அதிகரிப்பு

## பொதுமக்கள் தமது பிரச்னைகளை அறிவித்தால் துரித நடவடிக்கை என்கிறார் பிரதி பொலிஸ்மா அதிபர்

**யாழ்ப்பாணம், ஜூலை 02**

**யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த அனைத்துப் பிரதேசங்களிலும் சிறப்பு அதிரடிப் படையினர், இராணுவத்தினரின் உதவியுடன் சிறப்பு பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகே அறிவுறுத்தியுள்ளார்.**

அத்துடன், பொலிஸ் காவலரங்களையும் அதிகரிக்குமாறு சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அண்மை நாள்களாக வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. வீடுகளுக்குள் அத்துமீறும் வாள்வெட்டுக் கும்பல்கள் அங்குள்ளோரை அச்சுறுத்தும் வகையில் அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகேயிடம் வினவியபோது,

வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை தொடர்பில் சிறப்பு விசாரணைகளை முன்னெடுக்கப்படுகின்றன. வன்முறையில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவார்கள்.

அனைத்துப் பிரதேசங்களிலும் சிறப்பு அதிரடிப் படையினர், இராணுவத்தினரின் உதவியுடன் சிறப்பு பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸ் காவலரண்களை அதிகரிக்குமாறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்குப் பணித்துள்ளேன்.

அத்துடன், சில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் விசாரணைகளை இடம்பெறுகின்றன.

பொதுமகன் ஒருவர் தனது முறைப்பாட்டை ஏற்க பொலிஸ் நிலையத்தில் மறுப்பு தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் எனது வட்ஸ்அப் இலக்கத்துக்கு தகவல் அனுப்பியிருந்தார். அவரின் முறைப்பாட்டை ஏற்க மறுத்தமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. அத்துடன், முறைப்பாட்டாளர்கள் பலரின் முறைப்பாடுகள் தேங்கிக் கிடக்கின்றன. அவை தொடர்பில் எனது கண்காணிப்பின் கீழ் துரித விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் வன்முறைச் சம்பவங்கள், பொலிஸ் அலுவலகர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் எனது 071 859 2200 என்ற வட்ஸ்அப் எண்ணுக்கு தகவல்களை வழங்கினால் உடனடி நடவடிக்கைக்கு அறிவுறுத்தல் வழங்குவேன்-என்றார். (அ-03)



# மிளகாய் செய்கையில் யாழ்ப்பாணத்தில் இராணுவம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ். மாவட்ட படைத் தலைமையகத்தினால் மிளகாய் செய்கை முன்னெடுக்கப்படுகிறது.

இந்த தகவலை படைத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இராணுவத் தளபதியின் "துரு மித்துரு நவ ரட்டக்" திட்டத்தின் கீழ் விவசாய உற்பத்தியில் தன்நிறைவு அடைவதை இலக்காக கொண்டு யாழ். படைத் தலைமையகத்தின் விவசாயப் பண்ணையில் செய்கை பண்ணப்பட்ட மிளகாய் சகாய விலையில் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் வழிகாட்டலுக்கமைய இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# சௌபாக்கிய உற்பத்திக் கிராமம் பிரான்பற்றில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' என்ற திட்டத்தின்கீழ் கிராமிய தொழில்துறையை விருத்தி செய்யும் விதமாக 'சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள்' உருவாக்கப்பட்டுள்ளன.

நேற்று இந்த செயற்றிட்டத்தின் தேசிய அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்களை நிகழ்நிலை தொழில்நுட்பத்தினூடாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

யாழ். மாவட்டத்தின் சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்களில் ஒன்றான சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ப பண்டத்தரிப்பு, பிரான்பற்று கிராமத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் எம். பியுமான அங்கஜன் இராமநாதனால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பாரம்பரிய முறையிலான நல்லெண்ணெய் உற்பத்தி தொழில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்தோடு பயனாளிகளுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக செயலாளர், கிராம சேவையாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும், பிரான்பற்று கிராமத்தின் பயனாளிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் 30 பேருக்கு தொற்று

வவுனியா, ஜூலை 02

வவுனியாவில் 30 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் நேற்று முன் தினம் இரவு வெளியாகின.

அதில், தவசிகுளம் பகுதியில் பத்து பேருக்கும், நெடுங்கேணிப் பகுதியில் ஒருவருக்கும், பூந்தோட்டம் பகுதியில் இருவருக்கும், பெரியார்குளம் பகுதியில் இருவருக்கும், திருநாவற்குளம் பகுதியில் மூவருக்கும், கற்குளம் பகுதியில் ஒருவருக்கும், சிதம்பரபுரம் பகுதியில் ஒருவருக்கும், ஆச்சிபுரம் பகுதியில் இருவருக்கும், மாமடு பகுதியில் மூன்று பேருக்கும், அலகல்ல பகுதியில் ஒருவருக்கும், பெரியஉளுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், இறம்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பொலிசார் இருவருக்கும் என 30 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# தாதியர் வேலைநிறுத்தம் நோயாளர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 02

பதவி உயர்வு மற்றும் தாதிய யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் சுகவீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதால், பல வைத்தியசாலைகளின் பணிகள் பாதிக்கப்பட்டன. இதனால் நேற்றும் இன்றும் இந்த சுகவீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், கொரோனா வைத்தியசாலைகள், சிகிச்சை மையங்கள் மற்றும் விசேட வைத்தியசாலைகள் என்பனவற்றில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படமாட்டாது என அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

அவசர மற்றும் அத்தியாவசிய சேவைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, பல வைத்தியசாலைகளின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதால், நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி உள்ளதாக தெரிவிக் கப்பட்டது.

# விக்டோரியா நீர்த்தேக்க பிரதேசத்தில் 10 நிலஅதிர்வு கண்காணிப்பு கருவிகள்

கொழும்பு, ஜூலை 02

விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் 10 புதிய நில அதிர்வு கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் பதிவாகியிருந்த நில அதிர்வுகளின் எண்ணிக்கையை கருத்தில்கொண்டு, புதிய நில அதிர்வு கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன என சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

நில அதிர்வு கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டதால், விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் ஏற்படக்கூடிய அதிர்வுகளை முன்னரைவிட சிறப்பான முறையில் கண்காணிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.



# மட்டக்களப்பு விமான நிலையத்தில் சகல வசதிகளும் உருவாக்கப்படும்!

### அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 02

மட்டக்களப்பு விமான நிலையம் அதிக வசதிகளுடன்கூடிய கவர்ச்சிகரமான உள்நாட்டு விமான நிலையமாக உருவாக்கப்படவுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு விமான நிலையத்துக்கு நேற்று வியாழக்கிழமை மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்த வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

1958ஆம் ஆண்டில் சிவில் சேவை துறையின் கீழ் கட்டப்பட்ட இந்த விமான நிலையம் பின்னர் இலங்கை விமானப் படைக்கு 1983இல் ஒப்படைக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

கடந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின்போது விமான நிலையத்தின் ஓடுபாதை உருவாக்கப்பட்டு உள்நாட்டு விமான நிலையமாக அது இயக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவித்து வர்த்தமானி வெளியிடப்பட்ட போதிலும், அது சர்வதேசத்துக்குரிய தரத்தில் உருவாக்கப்படவில்லை என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

உள்நாட்டு விமானங்களுக்காகக்கூட அங்கு எந்த வளர்ச்சியும் செய்யப்படவில்லை .

இந்த நிலையில், உள்நாட்டு விமானங்களை இயக்குவதற்கு முன்னர் அடிப்படைத் தேவைகளின் பட்டியலைத் தொகுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

# மேஜர் ஜெனரலுக்கு பிணை!

கொழும்பு, ஜூலை 02

மின்னேரியா தேசிய பூங்கா வனஜீவராசிகள் திணைக்கள அலுவலர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைதான இராணுவ மேஜர் ஜெனரல் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அவர் கெக்கிராவை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இராணுவ மேஜர் ஜெனரல் நேற்று ஹபரணை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததை தொடர்ந்து, கைது செய்யப்பட்டார் என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். இராணுவ மேஜர் ஜெனரல் மீது இரண்டு முறைப்பாடுகள் உள்ளனவென அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் குறித்து இராணுவ விசாரணைக் குழுவும் விசாரணை நடத்தி வருகிறது. யானைக்குட்டிகள் கடத்தல் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களம் மேற்கொண்ட சோதனையில், சந்தேகத்துக்கிடமான இரண்டு இராணுவ வாகனங்கள் நிறுத்தாமல் சென்று, முகாமுக்குள் நுழைந்ததை தொடர்ந்து இந்த சர்ச்சை தோன்றியது.

# டெல்டாவை எதிர்த்து போராடுவதற்கு அரசிடம் சரியான திட்டம் கிடையாது

### சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூலை 02**

**டெல்டா என அழைக்கப்படும் பயங்கரமான இந்திய திரிபு வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கு சரியான திட்டத்தை அரசாங்கம் இது வரை தயாரிக்கவில்லை என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண,

கொரோனா பரவல் நாட்டில் தொடங்கியதிலிருந்து பின்பற்றி வரும் செயல்திட்டத்தையே அரசாங்கம் தொடர்கிறது. இந்த சூழ்நிலையை எதிர்கொள்ள புதிய செயல் திட்டத்தை முன்னெடுக்கவில்லை.

ஏற்கனவே பல பகுதிகளில் பரவியிருக்கும் இந்திய மாறுபாடு நாட்டில் அதிகமான பகுதிகளுக்கு பரவியுள்ளதா என்பதை தீர்மானிக்க சரியான ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பை மேற்கொள்வது மிகவும் முக்கியமானது.

சரியான செயல்திட்டம் எதுவும் இல்லை என்றால், சில வாரங்களுக்கு முன்பு இந்தியா அனுபவித்ததை இலங்கை விரைவில் அனுபவிக்கும்.

அரசாங்கம் நிலைமையை இன்னும் தீவிரமாக எடுத்துக் கொள்ளாவிட்டால் ஒரு பெரிய அழிவை தவிர்க்க முடியாது.

இதற்கிடையில், கடந்த சில நாட்களில் மக்களின் நடத்தை மிகவும் ஏமாற்றமளிக்கும் விதமாக மோசமாக உள்ளது.

கோவிட் ஆபத்து சமூகத்திலிருந்து மறைந்துவிட்டதைப் போல மக்கள் நடந்துகொள்கிறார்கள். ஆபத்து இன்னும் வீரியமாக உள்ளது-என்றார்.

# இரத்த தட்டுப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக வீரசிங்கம் மண்டபத்தில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

இலங்கை பொதுப்பயன்பாடு ஆணைக்குழு , யாழ் மாவட்ட மின்னியலாளர்கள் மற்றும் லயன்ஸ் கழகம் ,பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டதாக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் சி.ஜெயசூரியன்.தெரிவித்தார்

தற்போது நாட்டில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை பூர்த்தி செய்யும்முகமாக எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



அந்த அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று 10ஆவது முகாம் காலை 9.30 மணியிலிருந்து ஆரம்பமாகி இடம்பெற்றது. குறித்த இரத்த தான முகாமில் மின்னியலாளர்கள் உட்பட பொது மக்கள் கலந்துகொண்டனர்.

# கோண்டாவில் வன்முறையில் துண்டாடப்பட்ட கை மருத்துவர்களின் முயற்சியினால் பொருத்தப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜூலை 02

கோண்டாவில் செல்வபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வாள்வெட்டுக்கு இலக்காகி துண்டிக்கப்பட்ட ஒருவரின் கை யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையாளர்களின் கூட்டு முயற்சியினால் பொருத்தப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை கூடத்தில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட சத்திரசிகிச்சை நேற்று அதிகாலை 4 மணிக்கு வெற்றிகரமாக நிறைவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒட்டுறுப்பு சத்திரசிகிச்சை வல்லுநர் இளஞ்செழிய பல்லவன் தலைமையில் நரம்பியல் சத்திரசிகிச்சை வல்லுநர் பொன்னம்பலம் ஆதித்தன், மயக்க மருந்து மருத்துவ வல்லுநர் மற்றும் மருத்துவர்கள் தாதியர்கள் என கூட்டு சேவையினால் கை துண்டாடப்பட்டவருக்கு வெற்றிகரமாக சத்திரசிகிச்சை முன்னெடுக்கப்பட்டது.

கோண்டாவில் செல்வபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் 8 பேர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஸ்ரூடியோ ஒன்றை நடத்தி வந்த இரு தரப்பினர் இரவு தங்கியிருந்தபோது பிறிதொரு 6 பேர்கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் இரவு 9.40 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

வாள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வந்த கும்பல் வீட்டைத் தாக்கியும் குறித்த ஸ்ரூடியோ அமைந்திருக்கும் பகுதியை தீமூட்டியும் சேதப்படுத்தியுள்ளது.

இதன்போது கார் மற்றும் ஓட்டோ என்பன கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தில் இளைஞர் ஒருவரின் கை துண்டாடப்பட்ட நிலையில் அவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவரின் துண்டாடப்பட்ட கை உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்களினால் சத்திரசிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது.

# பதுக்கிவைக்கப்பட்டிருந்த உர மூடைகள் சிக்கின!



கொழும்பு, ஜூலை 02

நானுஓயா பகுதியில் நிவாரண விலையில் விற்பனை செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ஒரு தொகை உர மூடைகளை, அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படவுள்ளது.

நானுஓயா பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் அதிக விலைக்கு இரசாயன உரம் விற்பனை செய்யப்படுவதாக நுவரெலியா நுகவோர் அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, மேற்படி வர்த்தக நிலையங்களும், வர்த்தகர்களின் வீடுகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த உர மூடைகளும் மீட்கப்பட்டுள்ளன. 129 உர மூடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. நிவாரண விலையில் 1500 ரூபாய்க்கு விற்பனை செய்வதற்காக பெற்றுக்கொடுக்கப்பட்ட இந்த உர மூடைகள் 3000 ரூபாய் தொடக்கம் 4000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் விவசாயிகளுக்கு இந்த உரத்தை 1500 ரூபாய்க்கே பெற்றுக்கொடுக்க நீதிமன்றத்தில் கோர உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கொரோனா அறிகுறிகள் காணப்படின் சிகிச்சை மூலம் இறப்பை தவிர்க்கலாம்

## யாழ். அரசாங்க அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 02

**கொரோனா தொற்று அறிகுறி இருந்தால் வைத்திய சாலைக்கு சென்று சிகிச்சை பெறுவதன் மூலம் இறப்புகளை தவிர்க்கலாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.**



யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை சற்று அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது.

எனவே, பொதுமக்கள் கொரோனா நோய் அறிகுறி காணப்படுமிடத்து உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று நோய்க்குரிய சிகிச்சையை பெறுமிடத்து உயிரிழப்புகளை தவிர்க்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த மாதத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா மரணங்கள் பதிவாகின்றன. எனவே, பொது மக்கள் இந்த விடயம் தொடர்பில் சற்று அவதானமாக செயற்படவேண்டும்.

சிலர் கொரோனா தொற்று அறிகுறி காணப்படும்போது வீடுகளில் இருந்தவாறு தமக்கு சிகிச்சை அளிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்கள். எனினும் இவ்வாறான செயற்பாட்டின் மூலம் சில பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன. அதாவது நோய் தொற்றுக்கு உள்ளாகி நோயின் தாக்கம் அதிகரிக்கும்போது சில வேளைகளில் இறப்பு சம்பவிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

எனவே பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். அதாவது நோய் அறிகுறி காணப்படும் இடத்தில் உடனடியாக வைத்திய சாலைக்குச் சென்று பி.சி.ஆர். பரிசோதனை முடிவை பெற்று மருத்துவ ஆலோசனையைப் பெற்று செயற்படுவதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கையை கட்டுப்படுத்தலாம்-என்றார். (அ-3)

# செம்மணி பகுதியில் வெடிக்காத குண்டு!

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று காணப்பட்டமை தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று இந்தப் பகுதியில் பட்டம் விடச் சென்ற சிறார்கள் சிலர் அதனை அவதானித்த நிலையில் ஊர் பெரியவர்களுக்கு தகவல் வழங்கினர். சம்பவத்தை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த வெடிகுண்டு புற்களின் மேலால் காணப்படுவதால் அண்மையில் கொண்டு வந்து போடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு வவுனியாவில் நேற்று பி.சி.ஆர்.

வவுனியா, ஜூலை 02

வவுனியா நகரின் மத்தியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் சுகாதார பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வவுனியா நகரின் முக்கிய வீதிகளாக வவுனியா பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி உட்பட வவுனியா நகரினை சூழ உள்ள வீதிகளை முடக்கி பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதன் காரணமாக வவுனியா நகரின் மத்தியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்ததுடன் பொதுமக்கள் தமது அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்ய நகருக்குள் நுழைய முடியாத நிலை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



# 80 கழிவு தேயிலை மூட்டைகள் மீட்பு!

## கடத்தியவரும் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 02

கண்டி, கெலிஓயா - பூவெலிகடவிலிருந்து வெலம்பொட பகுதிக்கு மிகவும் சூட்சுமமான முறையில் கழிவுத் தேயிலையை கடத்துவதற்கு முற்பட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 'டொல்பின்' வானும், கழிவுத் தேயிலை 80 மூட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெலம்பொட பகுதியிலிருந்து லொறிகளில் கழிவுத் தேயிலை கடத்தப்பட்ட நிலையில் அவற்றை பொலிஸார் மடக்கிப்பிடித்து கடத் தலை முறியடித்த சம்பவங்கள் இதற்கு முன்னரும் பதிவாகின. எனவே, லொறியில் கடத்தினால்தான் சிக்கல் என எண்ணிய நபர்கள், இம்முறை கடத்தலுக்கு சொகுசு டொல்பின் வானொன்றை பயன்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் வெலம்பொட பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது . கெலிஓயா, பூவெலிகட பகுதியில் இருந்து கழிவுத் தேயிலையை ஏற்றி வந்த டொல்பின் வேன், வெலம்பொடை பகுதியில் வைத்து நேற்றிரவு மடக்கிப் பிடிக்கப்பட்டது.

கைதானவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். இது தொடர்பில் மேலதிக பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# மாகாணம் தாண்டிய பஸ் மடக்கிப்பிடிப்பு

கொழும்பு, ஜூலை 02

மாகாணங் களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாட்டை மீறி மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வந்த பஸ்ஸில் பயணித்த 38 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த பஸ் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

ஆரம்பக்கட்ட சட்ட நடவடிக்கைகளின் பின்னர் கைதானவர்கள் சுய தனிமைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

அத்துடன், பஸ்ஸில் கொண்டுவரப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# மரண வீட்டுக்கு சென்ற ஐவருக்கு கொரோனா!

## 36 குடும்பங்கள் தனிமையில்

கொழும்பு, ஜூலை 02

ஊவா மாவிலகம என்ற இடத்தில் கடந்த 30ஆம் திகதி மரண வீடொன்றுக்கு சென்றிருந்த ஐவருக்கு கோவிட் - 19 தொற்று உறுதியாகி இருப்பதாக பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.எம். பிரசன்ன தெரிவித்தார்.

தொற்று உறுதியான ஐவரும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அந்த மரண வீட்டில், இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்ட 36 குடும்பங்களைச் சேர்ந்த 148 பேர், அவரவர்கள் வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஒரே கிராமத்தை (ஊவா மாவிலகம) சேர்ந்தவர்களாவர்.

இத்தகவல்களை ஊவா மாவிலகம பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அனைவரும் உறுதிப்படுத்தினர்.

தொற்று உறுதியான ஐவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டதையடுத்து தொற்று உறுதி செய்யப்பட்டது. (அ)

# ரிஷாத்தின் கட்சியை புறக்கணித்தது ஏன்?

## மனோ, ஹக்கீமிடம் பாயிஸ் கேள்வி



கொழும்பு, ஜூலை 02

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில், மூன்று கட்சிகள் இணைந்து நடத்திய சந்திப்பு, பாதிக்கப்படப்போகும் சிறுபான்மைக் கட்சிகளுக்கும், சிறு கட்சிகளுக்கும் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ள முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான ஏ.ஜே.எம்.பாயிஸ், இந்தச் சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் புறக்கணிக்கப்பட்டது ஏன் என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் முறைகளை மாற்ற வேண்டும் என்பது தொடர்பில் அரசாங்கமும் ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவும் விடாப்பிடியாக நின்று காய்களை நகர்த்தி வரும் இத்தருணத்தில், அனுரகுமார திஸநாயக்க தலைமையிலான ஜே.வி.பியும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸும், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற் போக்குக் கூட்டணியும், கொழும்பில் நேற்று முன்தினம் சந்தித்து, இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். அத்துடன் காத்திரமான முடிவுகளையும் மேற்கொண்டிருக்கின்றனர் என ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிந்தது.

கடந்த காலங்களில் இவ்வாறான அனைத்து சந்திப்புக்களிலும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அழைக்கப்பட்டிருந்ததுடன் அதன் தலைவர் ரிஷாத் பதியுதீன் பிரதான பாத்திரமும் வகித்திருந்தார்.

கடந்த அரசின் அரசமைப்பு வழிகாட்டல் குழு, அரசியல் யாப்பு சபையிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முக்கிய பங்காற்றியதுடன், இந்தக் கட்சிகளுடன் இணைந்து கூட்டாகவும் தனியாகவும் அறிக்கைகள் சமர்ப்பித்திருந்தமையையும் நாம் இங்கு நினைவு படுத்த விரும்புகின்றோம்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்றத்தில் நான்கு எம்.பி க்களையும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகளை பெற்றிருப்பதும், 08 உள்ளூராட்சி சபைகளை ஆளுகை செய்வதும் வெளிப்படையானது.

அத்துடன், மேல் மாகாண சபை உட்பட நாட்டின் பல மாகாண சபைகளில் பிரதிநிதிகளையும் வென்றெடுத்திருக்கின்றது. இந்தச் சூழலில் கட்சித் தலைவர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், அனுர குமார திஸநாயக்க ஆகியோர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை ஓரங்கட்டியது ஏன்?

தலைவர் ரிஷாத் பதியுதீனை தடுப்புக் காவலில் வைத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு மேலும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் தொடர்பில் ஆராயும் தெரிவுக்குழுவில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இடம் பெறாத நிலையில், ஆகக் குறைந்தது இவ்வாறான கூட்டங்களிலாவது கட்சியை அழைத்திருக்க வேண்டுமல்லவா?

தலைவரின் தடுப்புக் காவலையடுத்து கட்சியின் உயர்பீடம் கூடி, அவரது பொறுப்புக்களை சில முக்கியஸ்தர்களுக்கு பகிர்ந்தளித்துள்ள நிலையில், பிரதித் தலைவர், செயலாளர், தவிசாளர் ஆகியோருக்கேனும் அழைப்பு விடுத்து இந்தக் கூட்டத்தில் கட்சியின் பிரதிநிதிகளுக்கு அந்தஸ்து வழங்கியிருக்கலாமே-என்றார்.

■ தாக்ஷாயினி

“சூடான சூழலில்தான் ஜூன் 23ஆம் திகதி க்ரிமிய கருங்கடல் எல்லைக்குள் பிரிட்டனின் போர்க் கப்பலான ‘எச்.எம்.எஸ் டிஃபெண்டர்’ நுழைய முயன்றது. இதையடுத்தே துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டு, எச்சரித்துள்ளது ரஷ்ய கடற்படை. இந்தச் சம்பவத்துக்கு விளக்கம் அளித்திருக்கும் பிரிட்டன் அரசு, ‘உக்ரைனின் ஓர் அங்கமான க்ரிமியாவுக்குள் நுழைய முயன்றது உண்மைதான்.”



# இரத்தம் சிந்தும் ‘செங்கடல்’ ஆகிறதா கருங்கடல்?

“வீணாக எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள். எங்கள் கருங்கடல் எல்லைக்குள் இனியும் அத்துமீறி நுழைந்தால் சுட்டு வீழ்த்தப்படுவீர்கள்...” - அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் அரசுகளுக்கு இப்படி எச்சரிக்கை அனுப்பியிருக்கிறது ரஷ்யா. ஜூன் 23ஆம் திகதி பிரிட்டனின் ‘எச்.எம்.எஸ் டிஃபெண்டர்’ போர்க்கப்பல், க்ரிமியா கருங்கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்ததற்குத்தான் இப்படிக் கொதித்திருக்கிறது ரஷ்யா. நூற்றாண்டுகளாகத் தொடரும் கருங்கடல் அரசியலும், அதில் உலக நாடுகள் ‘வலைவிரிக்க’ முயல்வதும் தொடர்கதையாகிவருகிறது. பல பில்லியன் டொலர் கொட்டும் இந்தக் கருங்கடல் அரசியல் விளையாட்டில் என்னதான் நடக்கிறது?

ஐரோப்பா, ஆசிய கண்டங்களுக்கு இடையே ரஷ்யா, ஜோர்ஜியா, துருக்கி, பல்கேரியா, ருமேனியா, உக்ரைன் ஆகிய நாடுகளின் எல்லைகளைக் கொண்டிருப்பதுதான் கருங்கடல். இந்தக் கடலில், இயற்கை எரிவாயுவின் இருப்பு பல மடங்கு அதிகம். உக்ரைன் கருங்கடல் எல்லையிலிருக்கும் எரிவாயுவின் அளவு மட்டுமே இரண்டு ட்ரில்லியன் க்யூபிக் மீற்றர் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், மொத்த கருங்கடல் படுகைகள் முழுவதும் எவ்வளவு எரிவாயு இருக்குமென்பதை கணக்கிட்டுக்கொள்ளுங்கள். இந்த இயற்கை வளத்தைப் பங்கு போட சுமார் இரண்டு டசின் நாடுகள் முட்டிமோதுவதுதான் கருங்கடல் அரசியலின் தட்பவெப்பத்தைச் சூடாக்கியிருக்கிறது!

**ஓட்டமான் ஏரி ரூ சோவியத் ஏரி**

கருங்கடலின் கடந்தகால வரலாற்றின் பக்கங்களைப் புரட்டினால், அது துருக்கி உதுமானிய பேரரசின் (Ottoman Empire) ஆளுகையிலேயே பெரும்பாலும் இருந்திருப்பது தெரியும். ஒருகாலத்தில் ‘ஒட்டமான் ஏரி’ என்று அழைக்கப்பட்ட கருங்கடல் வழியாகத்தான் ரஷ்யப் பேரரசின் தென் மேற்கு வர்த்தகத் தொடர்புகள் மத்திய தரைக்கடலை அடைந்தன. மேற்கு ஆசியாவிலிருந்து கிழக்கு ஐரோப்பாவுக்குக் கடல்வழியாகச் செல்ல வேண்டுமென்றாலும், கருங்கடல் வழியாகச் செல்வது மட்டுமே சாத்தியம். இஸ்தான்புல்லில் இருந்துகொண்டு போஸ்போரஸ் ஜலசந்தியைக் கட்டுப்படுத்தியதால், கருங்கடலில் ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய வர்த்தகத்தைத் தன் விரலசைவில் ஆட்டுவித்தது உதுமானியப் பேரரசு.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில், மேற்கண்ட வர்த்தகத்தில் சில இடையூறுகளை ஏற்படுத்தியது உதுமானியப் பேரரசு. ரஷ்யக் கப்பல்களை தடைசெய்து, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகக் கப்பல்கள் மட்டும் கருங்கடல் பகுதிக்குள் நுழைய உதுமானிய அரசு அனுமதியளித்தது. இதை எதிர்த்த ரஷ்யப் பேரரசு, பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்து, இந்தத் தடையை 1789இல் உடைத்தது. 1922இல் இரண்டு வரலாற்று நிகழ்வுகள் நிகழ்ந்தன. ஒன்று, சோவியத் யூனியன் உருவானது. இரண்டு, மன்னராட்சி நாடான உதுமானியப் பேரரசு கலைக்கப்பட்டது. இந்த நிகழ்வுகளுக்குப் பிறகு, கருங்கடல் பகுதிகள் சோவியத்தின் ஆளுகைக்குள் படிப்படியாகக் கொண்டுவரப்பட்டன. ‘ஒட்டமான் ஏரி’ என்றழைக்கப்பட்ட கருங்கடல், ‘சோவியத் ஏரி’ என்றும் அழைக்கப்பட்டது அப்போதுதான்!

1991இல் சோவியத் யூனியன் உடைந்த பிறகு அதிலிருந்து ருமேனியா, பல்கேரியா, உக்ரைன், ஜோர்ஜியா எனப் பல்வேறு நாடுகள் முளைத்தன. கருங்கடலில் ரஷ்யாவின் ஆதிக்கம் சிதறிப்போனது. இந்த நாடுகள்



ஒவ்வொன்றும் கருங்கடல் பகுதியில் தங்கள் எல்லைகளை வரையறுத்துக் கொள்வதில் முரண்பட்டதால், அதுவரை நாட்டாமை செய்து கொண்டிருந்த ரஷ்யாவால் எதுவும் செய்ய முடியவில்லை. இந்தக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடிவெடுத்த ‘நேட்டோ’ நாடுகள் கூட்டமைப்பு, ருமேனியா மற்றும் பல்கேரியாவைத் தங்கள் கூட்டமைப்பில் இணைத்துக்கொண்டன. கூட்டமைப்பில் உறுப்பினராக இல்லாத போதிலும், உக்ரைனில் கண்டம்விட்டு கண்டம் பாயும் நவீன ரக ஏவுகணைகளை நிறுத்தியது ‘நேட்டோ.’ இதை ரஷ்யா சிறிதும் ரசிக்கவில்லை. அன்றிலிருந்து கருங்கடலைக் கைப்பற்றுவது யார் என்கிற சர்வதேசக் கடல் அரசியல் வலுப்பெற்றது.



**க்ரிமியாவை இணைத்த புடின்**

“எங்கள் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்குவதுபோல, எங்கள் எல்லையிலுள்ள நாடுகளில் ‘நேட்டோ’ ஆயுதங்களை இறக்குமதி செய்வதை ஏற்க முடியாது. கருங்கடலில் அரசியல் செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும்” என்று ரஷ்யா பலமுறை கூறிப் பார்த்தது. ஆனால், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட 30 நாடுகள் அங்கம்வகிக்கும் ‘நேட்டோ’ அதைச் சட்டை செய்யவேயில்லை. பொறுமையிழந்த ரஷ்ய அதிபர் புடின், நேரடி அக்‌ஷனுக்குத் தயாரானார். உக்ரைனின் ஆளுகைக்குள் இருந்த க்ரிமியா தீப கற்ப பகுதிக்குள் 2014, பெப்ரவரி 20இல் ரஷ்யப் படைகள் நுழைந்தன. கணநேரத்தில் க்ரிமியாவின் விமான நிலையங்கள், இராணுவத் தளங்கள், பாராளுமன்றக் கட்டடம் ஆகியவை ரஷ்ய இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. க்ரிமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதா அல்லது உக்ரைனிலேயே ஒரு பகுதியாக அங்கம்வகிப்பதா என்பது குறித்து 2014, மார்ச் 16ஆம் திகதி பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பில் பங்கேற்றவர்களில் ஏறத்தாழ 97 சதவிகிதம் பேர், க்ரிமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதற்கு விருப்பம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து, ரஷ்யாவின் 84ஆவது மாகாணமாக க்ரிமியா இணைத்துக்கொள்ளப்பட்டது. க்ரிமியாவின் கருங்கடல் எல்லைகள், ரஷ்யாவின் எல்லைகளாக விரிந்தன.

இந்த இணைப்பைப் பல நாடுகள் இன்றுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ‘க்ரிமியா பிரச்னையில் இருதரப்பும் பேசி முடிவெடுத்துக்கொள்ள வேண்டும்’ என்று இந்தியா உள்ளிட்ட நாடுகள் நழுவிக்கொண்டன. ஆனால், மேற்குலக நாடுகளுக்கு ரஷ்யாவை ஓரங்கட்ட இந்த விவகாரமே போதுமானதாக அமைந்துவிட்டது. ஜி-8 நாடுகளின் கூட்டமைப்பிலிருந்து ரஷ்யா இடைநிறுத்தம் செய்யப்பட்டதுடன், 2014இல் ரஷ்யாவின் சோச்சி நகரில் நடைபெறவிருந்த ஜி-8 மாநாடும் இரத்து செய்யப்பட்டது. ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. ஆனால், ரஷ்யா இதையெல்லாம் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகளின்படி, இன்றுவரை உக்ரைன் நாட்டின் ஓர் அங்கமாகவே க்ரிமியா பார்க்கப்படுகிறது. ஆனால், அதைத் தனது பகுதியாக ரஷ்யா சொந்தம் கொண்டாடுவதால், கருங்கடலில் பிரச்னைகள் தொடர்கின்றன.

இவ்வளவு சூடான சூழலில்தான் ஜூன் 23ஆம் திகதி க்ரிமிய கருங்கடல் எல்லைக்குள் பிரிட்டனின் போர்க் கப்பலான ‘எச்.எம்.எஸ் டிஃபெண்டர்’ நுழைய முயன்றது. இதையடுத்தே துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டு, எச்சரித்துள்ளது ரஷ்ய கடற்படை. இந்தச் சம்பவத்துக்கு விளக்கம் அளித்திருக்கும் பிரிட்டன் அரசு, ‘உக்ரைனின் ஓர் அங்கமான க்ரிமியாவுக்குள் நுழைய முயன்றது உண்மைதான். ஆனால், ரஷ்ய கடற்படையால் நாங்கள் விரட்டப்படவில்லை. போர் ஒத்திகை நிகழ்ச்சியில் ரஷ்யா சுட்டுப் பயிற்சி செய்ததாகவே நாங்கள் இதைப் பார்க்கிறோம்’ என்று சமாளித்திருக்கிறது.

**கொதிக்கும் கருங்கடல்!**

கருங்கடலின் முக்கியத்துவம், அதன் அடிமடியிலிருக்கும் இயற்கை எரிவாயுவுக்காக மட்டுமல்ல... புதிய பொருளாதாரச் சந்தைகளுக்காகவும்தான் என்கிறார்கள் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள். “கருங்கடலை எல்லைகளாகக்கொண்டிருக்கும் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்துவருகிறது. தங்கள் கருங்கடல் எல்லையிலுள்ள இயற்கை எரிவாயுக்களை அந்த நாடுகள் சந்தைப்படுத்தும் பட்சத்தில், அவற்றின் பொருளாதாரநிலை அபரிமிதமாக உயரும் புதிய சந்தைகள் உருவாகும். இன்று நாளொன்றுக்கு 2.4 மில்லியன் பரல் கச்சா எண்ணெய் கருங்கடல் வழியாக வர்த்தகமாகிறது.

உலகின் மொத்த உற்பத்தியில் 25 சதவிகித தானியங்கள் இந்தக் கடலில்தான் பயணிக்கின்றன. சீனாவின் ‘பெல்ட் அண்ட் ரோட்’ திட்டத்தின் ஓர் அங்கமாக இருப்பதால், கருங்கடல் நாடுகளின் வியாபார கேந்திரமாக துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல் இன்னும் சில ஆண்டுகளில் முக்கியத்துவம் பெற்றுவிடும். இது தெரிந்ததால்தான், கருங்கடலுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இணைப்பை ஏற்படுத்தும் புதிய நீர்வழிப் பாதை உருவாக்கும் திட்டத்தை துருக்கி அதிபர் எர்டோகன் அறிவித்திருக்கிறார். ஒரு காலத்தில் இந்தியா எப்படி மேற்குல கம்பெனிகளுக்கு ஒரு அட்சயபாத்திரமாக இருந்ததோ, அதேபோல இன்று கருங்கடல் நாடுகள் அட்சயபாத்திரமாக மாறியிருக்கின்றன” என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

ஒருபக்கம் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் என ‘நேட்டோ’ கூட்டமைப்பு நாடுகள் கருங்கடலில் ஆதிக்கம் செலுத்தப் போட்டியிடுகின்றன. இன்னொரு பக்கம் ஜார்ஜியா, துருக்கி, பல்கேரியா, ருமேனியா, உக்ரைன் ஆகிய கருங்கடலின் எல்லை நாடுகளும் உரிமை கொண்டாடுகின்றன... ரஷ்யாவோ மொத்தச் சந்தையையும் கைப்பற்றி, கிழக்கு ஐரோப்பாவை மறைமுகமாகத் தனது கைப்பிடிக்குள் வைத்துக்கொள்ள முயல்கிறது. வரும் காலங்களில் வியாபார கேந்திரமாக மட்டுமல்ல... உலக அரசியலின் மையப் புள்ளியாகவும் கருங்கடல் மாறப்போவது நிஜம். இந்தக் காட்சிகள் உச்சம் பெறும்போது, கருங்கடல் ரத்தம் சிந்தும் ‘செங்கடல்’-ஆக மாறினாலும் ஆச்சரியம் இல்லை! ■

# பஸில் ராஜபக்ஷவின் மீள் வருகை ஏற்படுத்தப்போகும் மாற்றம் என்ன?

■ பி.பார்த்திபன்



ஜனாதிபதியின் சகோதரரும், ஆளும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகருமான பஸில் ராஜபக்ஷ அடுத்த வாரம் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார். அமெரிக்கவிலிருந்து கொழும்பு திரும்பிய அவர், அவரது இரண்டு வார 'தனிமைப்படுத்தல்' காலம் முடிவடைந்தவுடன் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பார் என்பது இலங்கையில் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் ஓர் அரசியல் நிகழ்வாக உள்ளது. எம்.பி.யாகப் பதவியேற்றுக்கொண்ட உடனடியாகவே அமைச்சர் பதவி ஒன்றும் அவருக்காகக் காத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வசம் தற்போதுள்ள நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுத்தான் பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பஸில் ராஜபக்ஷவுக்காக தமது பதவிகளைத் துறப்பதற்கு ஆளும் கட்சியின் எம்.பி.க்கள் பலர் தயாராக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் ஊடகச் சந்திப்பு ஒன்றை நடத்திய பொது ஜன பெரமுனவின் டிலான் பெரேரா எம்.பியும் இது குறித்து பேசியிருந்தார் "நெருக்கடிமிக்க நிலையில் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு வரவேண்டும் என்பது பொதுவான நிலைப்பாடாகும். சாதாரணமாக பாராளுமன்றத்திற்குச் சென்றவர்கள் அந்தப் பதவியை இலகுவில் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.  ஆனால், பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்காக தங்களது ஆசனத்தை தியாகம் செய்ய முண்டியடிக்கின்றனர்" என அவர் கூறியிருந்தமை மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகத் தெரியவில்லை.

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்குக் காணப்பட்ட இறுதித் தடையான, "இரட்டைப் பிரஜாவுரிமை" விவகாரம் அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் மூலமாக நீக்கப்பட்டுவிட்டது. கோட்டாபய ராஜபக்ஷ தனது இரட்டைப் பிரஜாவுரிமையை இரத்துச் செய்து ஜனாதிபதித் தேர்தலில் பொட்டியிட்டு வெற்றிபெற்றார். ஆனால், பஸில் இரட்டைப் பிரஜாவுரிமையை இரத்துச்செய்ய விரும்பவில்லை. இந்த நிலையில், இரட்டைப் பிரஜாவுரிமையுடனேயே பஸில் ராஜபக்ஷ இப்போது பாராளுமன்றம் வரப்போகின்றார். 20 ஆவது திருத்தம் அதற்கு வழிகோலுகின்றது.

பஸில் ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசத்துக்காகவே 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட ஒன்றாகத் தோன்றினாலும், உடனடியாக பாராளுமன்றத்துக்குள் அவர் பிரவேசிக்கவில்லை. தன்னுடைய நேரத்துக்காக காத்திருந்தவராகவே பஸில் பாராளுமன்றத்துக்குப் மீண்டும் பிரவேசிக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க போல தன்னுடைய வருகையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கான தருணம் ஒன்றுக்காக அவர் காத்திருந்ததாகவே தெரிகின்றது.

பஸிலின் பாராளுமன்றப் பிரவேசத்துக்குப் பின்னரே இலங்கை அரசியலில் பொற்காலம் ஆரம்பமாகின்றது என அரசாங்கத் தரப்பு எம்.பி.க்களும் அமைச்சர்களும் கூறிவருகின்றார்கள். அமெரிக்காவில் ஒரு மாத காலத்தை செலவிட்ட பஸில் ராஜபக்ஷ, இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான உபாயங்களை வகுத்துக்கொண்டிருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முன்னர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் அவர் பொருளாதாரத்தைச் சிறப்பாகக் கையாண்டவர் என்ற முறையில், தற்போது மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்துக்கு புத்துயிர் கொடுப்பதற்கு அவர் வரவேண்டும் என பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் கூறுகின்றார்கள்.

கடந்த மூன்று நாட்களாக கொழும்பு, பத்தரமுல்லையிலுள்ள பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெறும் ஊடகவியலாளர் சந்திப்புக்களில் பஸில் மீண்டும் வரவேண்டிய அவசியம் குறித்தும், அதற்காக தமது எம்.பி. பதவிகளைத் துறக்க பலர் தயாராக இருப்பது குறித்துமே  முன்னணியின் பிரமுகர்கள் கூறிவருகின்றார்கள். பொருளாதாரத்துக்குப் புத்துயிர் கொடுக்க பஸில்தான் வரவேண்டும் என்றால், ஜனாதிபதி கோட்டாபயவுக்கு மக்கள் எதற்காக வாக்களித்தார்கள்? நிதி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதற்காக நியமிக்கப்பட்டார்? போன்ற கேள்விகள் எதிர்த்ததரப்பினரால் கேட்கப்படுகின்றன.

மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஜனாதிபதிப் பதவிக்காலத்தில் (2010-2015) பஸில் ராஜபக்ஷதான் நீதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பை தன்வசம் வைத்திருந்தார். இக்காலத்தில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றன என்று அவர் மீது குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டிருந்தன. 2015 இற்குப் பின்னர் நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர் அவர் மீது பல்வேறு விசாரணைகளும் முடுக்கிவிடப்பட்டிருந்தன. குறிப்பாக ஆடம்பர பங்களா ஒன்றை சொந்தமாக வைத்திருந்தமை, காணிகள் கொள்வனவு என பல விடயங்களில் விசாரணைகள் இடம்பெற்றன. குறிப்பிட்ட ஆடம்பர பங்களா தன்னுடையதல்ல என பஸில் தெரிவித்ததையடுத்து, அதனை ஏலத்தில் விடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

> இலங்கைக்கு இப்போது இரண்டு சவால்கள் உள்ளன. ஒன்று - பொருளாதார ரீதியான நெருக்கசடி. இரண்டு சர்வதேச ரீதியாக உருவாகியுள்ள அழுத்தங்கள். ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் ஒருபுறம், அமெரிக்க காங்கிரஸ் பிரேரணை மறுபுறம் இலங்கை மீது தொங்கிக்கொண்டிருக்கும் கத்திகளாக உள்ளன.

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்குப் பிரவேசிக்க வேண்டும் என அரசாங்கத் தரப்பு எம்.பி.க்கள் தொடர்ச்சியாகவே கோரிவருகின்றார்கள். பொருளாதாரத்தை தூக்கி நிமிர்த்துவதற்கான மந்திரம் பஸிலிடம் மட்டும்தான் இருக்கின்றது என்பதுதான் அவர்களுடைய கருத்து. குறிப்பாக முதலீடுகள், ஐ.எம்.எவ். போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களைக் கையாள்வதற்கான திறமை -உபாயங்கள் பஸில் ராஜப்ஷவுக்கு மட்டும்தான் கைவந்த கலை என ஆளும் கட்சி எம்.பி.க்கள் சிலர் நம்புகின்றார்கள். நம்புவது மட்டுமன்றி, அதனை வெளிப்படையாகவும் பத்திரிகையாளர் மாநாடுகளில் சொல்லிவருகின்றார்கள். கடந்த மூன்று தினங்களாக ஒவ்வொரு நாளும் பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடுகளில் இதுவே சொல்லப்பட்டது.

நாட்டுக்குப் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியைத் தேடித்தந்த உல்லாசப் பயணத்துறை உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பெரும் பாதிப்பை எதிர்கொண்டது. அதன் பாதிப்பிலிருந்து மீள்வதற்கு முன்னதாகவே, பெருந்தொற்றாக உருவெடுத்த கொரோனா பொருளாதாரத்தை மேதாசமாகப் பாதித்திருக்கின்றது. வெளிநாடுகளில் - குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் பார்த்த ஆயிரக்கணக்கானவர்கள் தொழில் இழந்து வீடு திரும்பிவிட்டனர். உல்லாசப் பயணத்துறை படுத்துவிட்டது. இந்த இரண்டும் இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கை வகிப்பன. இதனைவிட, உள்ளூர் உற்பத்திகள், சந்தைப்படுத்தல் என்பனவும் கொரோனா முடக்கலால் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றன. இவ்வாறான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்க பஸில் ராஜபக்ஷவால் மட்டும்தான் முடிவும் என்ற கருத்து ஆளும் தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திறமையின் அடிப்படையில் மட்டுமே நியமனங்களை வழங்குவதாகச் சொல்கின்றார்கள். திறமையான சிரேஷ்ட அதிகாரிகளையே முக்கியமான பதவிகளுக்கு - முக்கிய விடயங்களைக் கையாள்வதற்கு நியமிப்பதாகச் சொல்லிக்கொள்கின்றார்கள். அவ்வாறான பலர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், அவ்வாறானவர்கள் நியமிக்கப்பட்ட போதிலும், அவர்களின் கீழ் உள்ள நிறுவனங்கள் திறமையாகச் செயல்படாமலிருப்பதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்க முடியும். எவ்வாறிருந்த போதிலும், தமக்கு நம்பிக்கையான - தமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் நிதி, பொருளாதாரம் போன்றவற்றைக் கையாள்வது தமக்கு இலகுவானதாக இருக்கும் என ஜனாதிபதியும் பிரதமரும் கருதலாம்.

அமெரிக்க பிரஜாவுரிமையையும் கொண்ட ஒருவராக பஸில் ராஜபக்ஷ இருப்பதாலும், அமெரிக்காவிலிருந்து திரும்பியவுடன் அமைச்சுப் பொறுப்பு ஒன்றை ஏற்க இருப்பதாலும், அது தொடர்பில் பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. குறிப்பாக ஏற்கனவே கிடப்பில் போடப்பட்டுள்ள அமெரிக்காவுடனான மிலேனியம் சவால் (Millenium Challenge Cooperation) உடன்படிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் வரலாம் என்ற கருத்து ஒன்று வெளியிடப்படுகின்றது. இது ரத்தானதால் 480 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டத்தை இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இப்போது இரண்டு சவால்கள் உள்ளன. ஒன்று - பொருளாதார ரீதியான நெருக்கசடி. இரண்டு சர்வதேச ரீதியாக அண்மைக் காலத்தில் உருவாகியுள்ள அழுத்தங்கள். ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் ஒருபுறம், அமெரிக்க காங்கிரஸில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மறுபுறம் இலங்கை மீது தொங்கிக்கொண்டிருக்கும் கத்திகளாக உள்ளது. இந்தக் கத்திகளிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் எதனையாவது செய்தாகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இலங்கைக்குள்ளது. அரசியல் கைதிகளில் சிலரை விடுவிப்பதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதும் மட்டும் இந்த நெருக்கடியைத் தணித்துவிடாது. இவ்விடயத்தில் பஸிலின் கைகளில் உள்ள "மந்திரக் கோல்" என்ன என்பது சில வாரங்களில் தெரிந்துவிடும்!

எது எப்படியிருந்தாலும், பஸிலின் பாராளுமன்றப் பிரவேசம் அரசியலில் குடும்ப ஆதிக்கத்தின் மற்றோர் அம்சம் என்ற கருத்தைத்தான் எதிரணியினர் வெளிப்படுத்துகின்றார்கள். பொருளாதாரத்தைப் பாதுகாப்பதைவிட குடும்ப ஆதிக்கத்தைப் பாதுகாப்பதுதான் இதன் நேர்கம் என்பது அவர்களுடைய கருத்து. பஸில் ராஜபக்ஷவுக்காக தேசியப் பட்டியல் எம்.பி. பதவியைத் துறப்பதற்குத் தயாராகவுள்ள ரஞ்சித் பண்டாரவுக்கு மற்றோர் உயர் பதவி காத்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. இருந்தபோதிலும், அவர் தான் பதவி துறப்பாரா என்பது இதுவரையில் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. அடுத்த அடுத்த தினங்களில் இவ்விடயத்தில் பரபரப்பான காட்சிகளை எதிர்பார்க்கலாம். ■

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 8 நேரம் - 45 நிமிடம்
வினாத்தாள் I ஆசிரியர் - மு.வே.அன்பழகன்


* பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| மழைக் காற்றைத் தாங்கிடும் | சின்னக் குருவி முயற்சியால் |
| வாழும் குஞ்சைக் காத்திடும் | சிறிய கூடு கட்டினால் |
| வலிமையான கூடுதான் | உன்னைப் போல சிறுவனால் |
| வடிவம் கூட அழகுதான் | ஊரை வெல்ல முடியுமே! |

24. இப்பாடலுக்குப் பொருத்தமான பழமொழி யாது?
1. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் 2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
3. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்

25. ஊரை வெல்ல முடிவது எப்படி?
1. சிறிய கூடு கட்டுவதால் 2. குருவி போல் முயற்சி செய்வதால்
3. வலிமையான கூடு கட்டுவதால்

26. இங்கு காணப்படும் கூடுகளிலுள்ள உருக்களுக்கு ஏதாவது பெறுமானம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. அவ் உருக்களின் கூட்டுத்தொகை குறுக்காகவும், கீழாகவும் காட்டப்பட்டு உள்ளன. பெறுமதி கொடுக்கப்படாத - ? - குறியீடு மூலம் காட்டப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் என்ன?



1. 10 2. 8 3. 9


* ஒரு வட்டமான வீதியில், ஒரே இடத்திலிருந்து சண்முகம் ஒரு திசையில் ஓட, அச்சுதனும் அபயனும் எதிர்த் திசையில் ஓடுகிறார்கள். சண்முகம் பாதி வட்டம் ஓடுவதற்கு முன்னரே அபயனைச் சந்திக்கின்றான். சண்முகம் பாதி வட்டத்தைக் கடந்த பின்னர் அச்சுதனைச் சந்திக்கின்றான். இதன்படி 27ஆம், 28 ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

27. மிக மந்தமாக ஓடுபவர்கள்
1. அச்சுதன் 2. அபயன் 3. சண்முகம்

28. மிக வேகமாக ஓடுபவன்
1. அச்சுதன் 2. அபயன் 3. சண்முகம்




29. பாதை ஒன்றை அமைப்பதற்கு 6 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதே வேலையை 4 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்?
1. 15 நாட்கள் 2. 10 நாட்கள் 3. 20 நாட்கள்

30. இந்த மூன்று எண் கூற்றுக்களும் உண்மையானவை. அதற்கேற்ப தரப்பட்ட விடைகளில் எது சரியான கூற்று எனத் தெரிவு செய்க.





31. தரப்பட்ட பொருளினை உயரத்திலிருந்து நேராகப் பார்க்கும் போது எவ்வாறு தோன்றும் என்பதைத் தெரிவு செய்க.



1.  2.  3. 

32. இலக்கங்கள் உள்ள சில்லு நேர்கோடு வழியே முன்னோக்கி உருளும் போது சந்திக்கும் ? குறி இடப்பட்டுள்ள கூடுகளுக்குப் பொருத்தமான எண்கள் முறையே,



1. 2, 9 ஆகும் 2. 3, 2 ஆகும் 3. 3, 9 ஆகும்

* பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் A, B, F, O, T என்னும் ஐந்து ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக 1, 2, 3, 4, 5 என்னும் இலக்கங்கள் (இதே ஒழுங்கிலன்றி) இடப்பட்டு, இவ்விலக்கங்கள் ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளன.

FOOT
FOUR
ATF

BOAT = 1235
FOOT = 1134

33. எழுத்து O விற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
1. 1 2. 3 3. 5

34. எழுத்து T யிற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
1. 1 2. 3 3. 5


35. தாயார் ஒருவர் தன்னிடத்திலிருந்த பணத்தில் 1/ 2 ஐப் புத்தகங்கள் வாங்கச் செலவழித்தார். அதன் பின்னர் அவர் மீதிப் பணத்தை இரு சம பகுதிகளாகப் பிரித்து அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்கச் செலவழித்தார். பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூபாய் 50 எனின் அவர் புத்தகங்கள் வாங்கச் செலவழித்த பணம் யாது?
1. ரூபாய் 50 2. ரூபாய் 100 3. ரூபாய் 200

36. இரண்டு மோட்டார் வண்டிகள் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டுப் பின்னர் அவை ஒவ்வொன்றும் எதிர்த்திசைகளில் 100 மீற்றர் தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு வண்டி வலப் பக்கமும் மற்றைய வண்டி இடப்பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 200 மீற்றர் தூரம் செல்கின்றன. இப்போது இரண்டு வண்டிகளுக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?
1. 600 மீற்றர் 2. 300 மீற்றர் 3. 200 மீற்றர்

37. பெட்டி ஒன்றில் மாம்பழம், தோடம்பழம், கொய்யாப்பழம் என்பன இருந்தன. மாம்பழத்தைப் போல் கொய்யாப்பழம் 2 மடங்கு இருந்தன. கொய்யாப்பழத்தைப் போல் 3 மடங்கு தோடம்பழம் இருந்தன. எல்லாமாகப் பெட்டியினுள் 36 பழங்கள் இருந்தால் கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை யாது?
1. 8 2. 12 3. 10

38. சதுர வடிவமான மரக்கறித்தோட்டம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 12 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித் தூண்கள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?
1. 20 2. 16 3. 12

39. ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு இங்கு காணப்படுகின்றது. அதன் முகங்களில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. இதனை ஒரு சதுரமுகியாக மறுபடியும் தயார் செய்யும் போது எதிர் முகங்களில் இருக்கும் எண்களுக்கிடையே ஒரு தொடர்பை இனங்காணலாம். அத்தொடர்புக்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.




1. 22 1. 21 1. 20

40. 2 குவளையின் கனவளவு = 1 கோப்பையின் கனவளவு
3 கோப்பையின் கனவளவு = 1 போத்தலின் கனவளவு
எனின் 3 1 /2 போத்தல்களின் கனவளவு எத்தனை குவளைகளின் கனவளவுக்குச் சமன்?
1. 21 குவளைகள் 1. 15 குவளைகள் 1. 12 குவளைகள்

# 6 மாதங்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பில்!

## நிர்ணய விலையையும் அறிவித்தார் அமைச்சர் மஹிந்தானந்த

கொழும்பு, ஜுலை 02

"அடுத்த 6 மாதங்களுக்குத் தேவையான அரிசி, கையிருப்பில் உள்ளது. எனவே, நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு எதுவும் ஏற்படாது. அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விடயத்தில் தளர்வுப் போக்குக்கு இடமே இல்லை."

- இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் அடுத்த ஆறு மாதங்களுக்கு நாட்டுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் உள்ளதால் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

விவசாயிகளிடமிருந்து இம்முறை நாட்டு அரிசி நெல் ஒரு கிலோ 50 ரூபாய்க்கும், சம்பா அரிசி நெல் 52 ரூபாய்க்கும், பச்சை நெல் 44 ரூபாய்க்கும் கொள்வனவு செய்யப்படும். மேற்படி விலைகளே நிர்ணயிக்கப்பட்டன.

நெல் சந்தைப்படுத்தும் சபை ஊடாக இன்று முதல் நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஆரம்பமாகும். ஏனைய காலப்பகுதிபோல் தாமதம் ஏற்படாது. விவசாயிகளுக்கு உடன் பணம் வழங்குவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

சம்பா மற்றும் கெகுலு



அரிசி ஒரு கிலோவை 98 ரூபாய்க்கும், நாட்டரிசி ஒரு கிலோ 96 ரூபாய்க்கும் விற்பனை செய்யமுடியும் என வர்த்தகத் துறை அமைச்சர் விலை நிர்ணயித்துள்ளார். அதனால்தான் ஒரு கிலோ நெல்லுக்கு 50 ரூபாயை நிர்ணயித்தள்ளோம். வர்த்தமானி வெளியிடப்பட்டாலும் அது செயலுக்கு வருவதில்லை என்ற குற்றச்சாட்டு அரசுக்கு எதிராக உள்ளது. எனவே, இம்முறை சட்டம் கடுமையாக செயல்படுத்தப்படும். அதிக விலைக்கு இனி அரிசி விற்கமுடியாது. இனிமேல் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும்.

சேதனப் பசளை மூலம் விவசாயம் என்ற முடிவில் இருந்து அரசு மாறாது" - என்றார். (இ)

மதுரங்குளியில் மனித எலும்புக்கூடுகள்!

# விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஜுலை 02

புத்தளம் - கொழும்பு வீதி, மதுரங்குளி - செம்பெட்டே பிரதேசத்திலுள்ள காணியொன்றிலிருந்து மனித எலும்புக் கூடுகள் மற்றும் துப்பாக்கி என்பன மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எஸ்.அசேல டி சில்வா முந்தல் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்திலுள்ள காணியில் மனித உடல் எச்சங்கள் மற்றும் துப்பாக்கி கிடப்பதைக் கண்டு பிரதேச மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மனித உடல் எச்சங்களையும் துப்பாக்கியையும் கைப்பற்றினர்.

சில காலத்துக்கு முன்பு உயிரிழந்த ஒருவர் அல்லது இருவரின் உடல் எச்சங்களாக இவை இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியே இதன் போது கைப்பற்றப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# சு.கவை மீட்க அரசியல் புரட்சிக்கு தயாராகின்றார் குமார வெல்கம

## சந்திரிகாவின் பிறந்தநாளையொட்டிய சந்திப்பில் வியூகம்

**கொழும்பு, ஜுலை 02**

**புதியதோர் அரசியல் கூட்டணியைக் கட்டியெழுப்பும் முயற்சியில் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஈடுபட்டுள்ளார்.**



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்டெடுப்பதை இலக்காகக்கொண்டே இந்தக் கூட்டணி ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும், இதன் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதியும் சு.கவின் முன்னாள் தலைவருமான சந்திரிகா அம்மையார் செயல்படுகின்றார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

தமது அணி ஊடாக சுதந்திரக் கட்சி மீட்கப்படும் என்ற தகவலை குமார வெல்கம ஏற்கனவே வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜபக்ஷ கூட்டணியிலிருந்து வெளியேறிய குமார வெல்கம, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் பிரேமதாஸவை ஆதரித்ததுடன், பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சந்திரிகா அம்மையாரின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற விசேட சந்திப்பின்போதே புதிய அரசியல் இயக்கம் பற்றி பேசப்பட்டுள்ளது எனவும், பல தரப்புகள் இணையக்கூடும் எனவும் குமார வெல்கம தரப்பு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, புதியதோர் அரசியல் அணியை உருவாக்கினால்கூட குமார வெல்கம தம்முடனேயே பயணிப்பார் என்று சஜித் அணி நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (இ)

# யாழ். உட்பட 3 மாவட்டங்களில் நான்கு பிரதேசங்கள் முடக்கம்

கொழும்பு, ஜுலை 02

நாட்டில் கொரோனாவின் தீவிரத்தால் மேலும் சில பிரதேசங்கள் நேற்றுக் காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 4 பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர



சில்வா தெரிவித்தார்.

அதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் கிராம சேவகர் பிரிவில் கள்ளித்தெரு மற்றும் கல்வந்தாழ்வு ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தில் கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுஹூம்பல மேற்கு கிராம சேவகர் பிரிவில் வேலமத பரணகம பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்டடன்சினன் கிராம சேவகர் பிரிவின் மத்திய பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி மேலும் கூறினார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 403 பேர் கைது



கொழும்பு, ஜுலை 02

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 403 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 45 ஆயிரத்து 935 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார். மாகாணப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மீறி மேற்கு மாகாணத்துக்குள் நேற்றுமுன்தினம் நுழைய முயன்ற 107 நபர்கள் 59 வாகனங்களுடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# தும்பளையில் வீட்டில் இறந்தவருக்கு கொரோனா மரண வீட்டுக்குச் சென்றவர்கள் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜுலை 02

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர்.

இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 93 ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குருநகரைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை வீட்டில் உயிரிழந்தார்.

அவரது உயிரிழப்புத் தொடர்பில் கேள்வியுற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அன்று காலை அங்கு சென்றுள்ளார்.

சந்தேகம் கொண்டு உயிரிழந்தவரின் சடலத்தை பி.சி.ஆர். பரிசோதனைக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததுடன் வீட்டிலிருந்தவர்களிடம் மாதிரிகளைப் பெற்றனர்.

அதன் பரிசோதனை முடிவுகளில் உயிரிழந்தவர் மற்றும் அவரது குடும்பத்தில் மூவருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனால் செவ்வாய்க்கிழமை காலை மரண வீட்டுக்குச் சென்றவர்கள் அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (இ - 03)



# மீசாலையில் நிகழ்ந்த விபத்தால் இருளில் மூழ்கியது தென்மராட்சி

தென்மராட்சி, ஜுலை 02

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தை அடுத்து தென்மராட்சியின் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது.

மீசாலைப் பகுதியில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிஸாரின் பஸ்ஸூக்குப் பின் பக்கமாக டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

அதனால் அருகில் இருந்த மின்கம்பம் சேதமடைந்து கொடிகாமம், மீசாலை மற்றும் சாவகச்சேரி உள்ளிட்ட சில பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது.

குறித்த விபத்து சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# சீனாவை ஒடுக்க முயல்வோருக்கு பதிலடி கொடுக்க தயங்கமாட்டோம்!

## நூற்றாண்டு விழாவில் ஜனாதிபதி ஜி ஜின்பிங்

*பீஜிங், ஜூலை 02*

“பிற நாடுகளை சீனா ஒரு போதும் ஒடுக்கவில்லை. அதே நேரம் யாரும் சீனாவை அடக்குவதற்கு அனுமதிக்க மாட்டோம். சீனாவை யாராவது ஒடுக்க நினைத்தால் அவர்களின் தலைகளை சீனப் பெருஞ்சுவரில் அடித்து நொறுக்குவோம்” என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் எச்சரித்துள்ளார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் தலைநகர் பீஜிங்கில் உள்ள தியானென்மன் சதுக்கத்தில் நேற்று ஆரம்பமானது. விழாவை ஆரம்பித்து வைத்து சுமார் 70ஆயிரம் மக்கள் மத்தியில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உரையாற்றினார்.



சீனா தனது ஆயுதப் படைகளை உலகத் தரத்திற்கு உயர்த்தும். நமது தேசிய இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நலன்களைப் பாதுகாப்பதற்கான அதிக திறன் மற்றும் நம்பகமான வழிமுறைகள் எம்மிடம் உள்ளன.

எந்தவொரு வெளிநாட்டு சக்திகளும் எங்களை கொடுமைப்படுத்தவோ, ஒடுக்கவோ, அடிபணிய வைக்கவோ சீன மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

பிற கலாசாரங்கள், பிற சாதனைகளிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள சீனா ஆர்வமாக உள்ளது. உலகின் பயனுள்ள பரிந்துரைகளையும் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் வரவேற்கிறோம். ஆனால், சீனர்களை ஒடுக்கும் வகையிலான உலகின் பிரசாரங்களை சீனா ஒருபோதும் ஏற்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சீன ஜனாதிபதியின் உரை அமெரிக்காவுக்கு மறைமுகமாக எச்சரிப்பதாக அமைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ)



# வெப்பத்தால் தகிக்கும் கனடா: 5 நாட்களில் 486பேர் திடீர் பலி!

*றொறன்ரோ, ஜூலை 01*

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கடந்த ஐந்து நாட்களில் 486 திடீர் மரணங்கள் பதிவாகியுள்ளன. இது வழக்கத்தைவிட 195வீதம் அதிகமாகும்.

கனடாவில் பல மாகாணங்களில் வரலாறு காணாத வகையில் கடும் வெப்ப அலை பதிவாகி வருகிறது. இந்த நிலையில் ஏற்படும் திடீர் மரணங்கள் அதிகரித்த வெப்பத்தால் ஏற்பட்டவையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு சடுதியான உயிரிழந்தவர்களில் பலர் முதியவர்களாவர். இதிலும் பலர் காற்றோட்டமில்லாத வீடுகளில் தனியாக வசித்து வந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் அண்மைநாட்களில் 49.5 பாகை செல்சியஸாக அதிகரித்தது. கனடாவில் ஒருபோதும் 45 பாகை செல்சியஸை வெப்பநிலை கடந்ததில்லை. கனடா உட்பட வட அமெரிக்கா முழுவதும் அசாதாரணமாக வெப்பநிலை அண்மைய நாட்களில் பதிவாகி வருகிறமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 96 நாடுகளில் டெல்டா திரிபு: வரும் நாளில் தாக்கம் கூடும்!

*ஜெனிவா, ஜூலை 02*

கொரோனா வைரஸின் டெல்டா திரிபு 96 நாடுகளில் பரவியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. அத்துடன், வரும் மாதங்களில் டெல்டா திரிபு உலகின் பெரும்பாலான நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் தொடர்பான உலக நிலவரம் குறித்த புதிய அறிக்கையிலேயே இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை 96 நாடுகளில் டெல்டா திரிபு பரவியமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரவல் காணப்படும் நாடுகளில் இந்த வகை கொரோனா பாதிப்பு உயர்ந்து வருவதும், மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவதும் அதிகரித்துள்ளது.

டெல்டா திரிபு வைரஸின் பரவல் அதிகரிக்கும் நிலையில் இது மேலும் அதிதீவிரமாகப் பரவி வரும் மாதங்களில் உலகில் பெரும்பாலான நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் திரிபுகளில் டெல்டா மிக வேகமாகப் பரவும் அபாயத்தைக் கொண்டதாக உள்ளது. தடுப்பூசி போட்டுக்கொள்ளாத மக்களிடையே இது மிக வேகமாகப் பரவி வருகிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# நூறாண்டில் சீன கம்யூனிஸ்ட் கட்சி: கொண்டாட்டம் கோலாகல ஆரம்பம்!



*பீஜிங், ஜூலை 02*

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா தலைநகர் பீஜிங்கில் உள்ள தியான்மென் சதுக்கத்தில் நேற்று வியாழக்கிழமை கோலாகலமாக ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

சீன ஜனாதிபதியும்,சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான ஜி ஜின்பிங் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் சுமார் 70,000 பேர் வரை பங்கேற்றனர். நிகழ்வின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ஜி ஜின்பிங் உரையாற்றினார்.

நூறாண்டுகளுக்குமுன்பு 1921 ஜூலை 1 ஆம் திகிகதி ஷங்காய் நகரில், ஒரு சிறிய வீட்டில் சீன கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது. இன்று அது மாபெரும் இயக்கமாக வளர்ந்து நூற்றாண்டை எட்டியுள்ளது.

இதேவேளை,சீனகம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக் கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு முழுநீள ஆவணப்படம் ஒன்றை சீனா உரு வாக்கியுள்ளது. கடந்த 100ஆண்டுகளில் சீனா அடைந்த வளர்ச்சியையும், அதன் வரலாற்றையும் விவரிக்கும் வகையில் இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. சுமார் 2,500 நிமிடங்களை கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆவணப்படத்தை 100அத்தியாயங்களாக வெளியிட சீனா திட்டமிட்டுள்ளது.

(ஐ)

# கனடாவில் மீண்டும் புதைகுழி: 182 மனிதஎச்சங்கள் கண்டறிவு!

*றொறன்ரோ, ஜூலை 02*

கனடாவின் இன்னொரு குடியிருப்பு பாடசாலையில் 182 மனிதஎச்சங்கள் கண்டறியப்பட்டன. இவை முன்னர் அடையாளப்படுத்தப்படாதவை என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கண்டறியப்பட்ட இந்த மனித எச்சங்கள் குடியிருப்பு பாடசாலையை சேர்ந்த பழங்குடி சிறுவர்களுடையவையா என்பது உறுதிப்படுத்தப்படும் என்று பழங்குடியின தலைவர்கள் அறி வித்துள்ளனர்.

இதற்கு முன்னர், பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில்



கம்லூரப்ஸ் நகருக்கு அண்மையாக குடியிருப்பு பாடசாலை ஒன்றில் 215 பழங்குடி சிறுவர்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டன. இதேபோன்று சஸ்காட்செவன் மாகாணத்தின் தலைநகர் ரெஜினாவிலிருந்து 140 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மேரிவல் இந்தியன் குடியிருப்பு பாடசாலையில் 751 சிறுவர்எச்சங்கள் கண்டறியப்பட்டன.

இந்த நிலையில், தற்போது பிரிட் டிஷ் கொலம்பியாவில் இன்னொரு குடியிருப்பு பாடசாலையில் 182 மனித எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இவ்வாறு தொடர்ச்சியாக முன்னாள் குடியிருப்பு பாடசாலைகளில் மனிதஎச்சங்கள் மீட்கப்படுவது கனடாவில் பரபரப்பையும் குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது. விசாரணைகள் தொடர்ந்தால் மேலும் புதைகுழிகள் கண்டறியப்படும் என்று எதிர்பார்ப்பதாக பழங்குடியின தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் 19 ஆம் நூற்றாண்டு முதல் 1970 கள் வரை குடியிருப்பு பாட சாலைகள் இயங்கின. இங்கு சுமார் ஒரு இலட்சத்து 50ஆயிரம் பழங்குடி சிறுவர்கள் கட்டாயப்படுத்தி இணைக்கப்பட்டனர். தாய்மொழியுரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டதுடன், கட்டாய மாக கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றப்பட் டனர். அத்துடன், அவர்கள் உடல், உள ரீதியில் சித்திரவதைகளுக்கும் உள்ளாகினர். இந்த நடவடிக்கைகளால் 6 ஆயிரம் சிறுவர்கள் உயிரிழந்தனர் என்று கருதப்படுகின்றது. இது ஒரு கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலையாகவும் பார்க்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இங்கிலாந்து டெஸ்ட்: ஷுப்மன் கில் விலகல்!



புதுடில்லி, ஜூலை 02

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து காயம் காரணமாக இந்திய அணியின் தொடக்க வீரர் ஷுப்மன் கில் விலகவுள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் ஒகஸ்ட் 4ஆம் திகதி நாட்டிங்ஹாமில் தொடங்குகிறது. இந்தத் தொடரில் இந்திய அணியின் தொடக்க வீரரான ஷுப்மன் கில் காயம் காரணமாக விளையாடமாட்டார் என்று கூறப்படுகின்றது.

கெண்டைக்கால் மற்றும் தொடையில் காயமடைந்த அவருக்கு சத்திர சிகிச்சை செய்யவேண்டியுள்ளது. இதனாலேயே அவர் தொடரிலிருந்து விலக நேரிட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (ஐ)



## மே.இ.தீவுகளுடனான இருபது-20: தென்னாபிரிக்கா த்ரில் வெற்றி!

சென். ஜோர்ஜ், ஜூலை 02

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது இருபது - 20 போட்டியில் தென்னாபிரிக்கா ஓர் ஓட்டத்தால் 'த்ரில்' வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகளின் சென். ஜோர்ஜஸ் நகரில் செவ்வாய் இரவு நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 20 ஓவர்கள் நிறைவில் அந்த அணி 8 விக்கெட்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

குயின்ரன் டி கொக் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 72 ஓட்டங்களையும், ராஸி வான் டெர் டுசென் 32, எய்டன் மார்க்ரம் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்தியத்தீவுகளின் பந்துவீச்சில் ஒபேட் மக்காய் 4, டுவைன் பிராவோ 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு தொடக்கம் கொடுத்த லெவிஸ் 27, சிமெனட்ஸ் 22 ஓட்டங்களை எடுத்தபோதும் நிதானமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர். இதேபோன்றே நிக்கோலஸ் பூரனும் 26 ஓட்டங்களை நிதானமாகப் பெற்றார்.

இறுதியில் ரஸல் 16 பந்துகளில் 25, அலன் 9 பந்துகளில் 14 என்று அதிரடி காட்ட முயன்றபோதிலும் 20 ஓவர்களும் நிறைவடைந்தன. அப்போது மேற்கிந்தியத்தீவுகள் அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 166 ஓட்டங்களையே பெற்றது. இதனால் ஓர் ஓட்டத்தால் அந்த அணி தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் நோர்ட்ஜே, சம்சி ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

5 போட்டிகள் கொண்ட தொடரில் அந்த அணி தற்போது 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (ஐ)

# யூரோ கிண்ண உதைபந்தாட்டம்
# கடைசிநேரத்தில் அதிரடி; காலிறுதியில் உக்ரைன்!

ஹம்ப்டன்பார்க், ஜூலை 02

கடைசி நேரத்தில் அடித்த கோல் மூலம் சுவீடனை வெளியேற்றி முதன்முறையாக யூரோ கிண்ணத் தொடரின் காலிறுதிக்கு தகுதி பெற்றது உக்ரைன்.

யூரோ கிண்ண உதைபந்தாட்டத் தொடர் ஐரோப்பாவின் 11 நகரங்களில் நடக்கிறது. இதில் 16 அணிகள் சுற்றின் இறுதிப் போட்டியில் சுவீடன் - உக்ரைன் அணிகள் மோதின.

போட்டியின் 27 வது நிமிடம் உக்ரைன் வீரர் யர்மெலன்கோ கடத்திக் கொடுத்த பந்தை ஷின்சென்கோ கோல் அடித்தார்.

இதற்கு பதிலடியாக 43ஆவது நிமிடத்தில் சுவீடன் வீரர் எமில் போர்ஸ்பெர்க் கோல் பதில் கோல் போடவே முதல் பாதி ஆட்டம் 1 - 1 என்ற கோல் கணக்கில் சம நிலையில் முடிவடைந்தத.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. இதனால், போட்டியில் வெற்றி தோல்வியை கணிக்க கூடுதல் நேரம் வழங்கப்பட்டது.

99ஆவது நிமிடத்தில் சுவீடனின் டேனியல்சன் தவறான ஆட்டத்திற்காக மஞ்சள் அட்டை எச்சரிக்கை பெற்றார். ஆனால், மீள் பரிசீலனையில் அவருக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். இதனால், சுவீடன் 10 வீரர்களுடன் மீதி ஆட்டத்தை விளையாட நேரிட்டது.



தொடர்ந்த ஆட்டத்தில் 120 + 1ஆவது நிமிடத்தில் ஷின்சென்கோ அடித்த பந்தை தலையால் முட்டி கோலாக மாற்றினார் ஆர்டெம் தௌபிக். இதனால், இறுதியில் 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற உக்ரைன் காலிறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது.யூரோ கிண்ண காலிறுதி போட்டி அட்டவணை இலங்கை நேரப்படி வருமாறு,

ஜூலை 02 இரவு 9.30 -சுவிற்சர்லாந்து - ஸ்பெயின்

ஜூலை 03 ந. இ. 12.30 - பெல்ஜியம் - இத்தாலி

ஜூலை 03 இரவு 9.30 - செக் குடியரசு - டென்மார்க்

ஜூலை 04 ந. இ. 12.30 - உக்ரைன் - இங்கிலாந்து. (ஐ)

## இலங்கைக்கு எதிராக களமிறங்கும் பாண்டன்!



லண்டன், ஜூலை 02

இலங்கையுடனான கடைசி ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணியில் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான ரொம் பாண்டன் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்ற நிலையில் 2ஆவது ஒருநாள் போட்டி நேற்றிரவு நடந்தது. மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி ஞாயிற்றுக்கிழமை நடக்கவுள்ளது.

இங்கிலாந்து வீரர் டேவிட் மலன் ஒருநாள் தொடருக்கு முன் தனிப்பட்ட காரணங்களுக்காகஅணியிலிருந்து விலகினர். இந்த நிலையில், கடைசி ஒருநாள் ஆட்டத்தில் மலனுக்குப் பதில் பாண்டன் சேர்க்கப்படுகிறார். (ஐ)

## மீண்டும் முதலிடத்தில் கேன் வில்லியம்ஸன்!



டுபாய், ஜூலை 02

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) டெஸ்ட் வீரர்களுக்கான தரவரிசையில் நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸன் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

வில்லியம்ஸன் தலைமையிலான நியூஸிலாந்து கடந்த வாரம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தைக் கைப்பற்றியது.

இந்தியாவுக்கு எதிரான இந்த போட்டியில் வில்லியம்ஸன் முதல் இனிங்ஸில் 49, இரண்டாவது இனிங்ஸில் 52 ஓட்டங்களை வில்லியம்ஸன் பெற்றார். இது அவர் 901 புள்ளிகளை பெற்றார்.

இதன்மூலம், 891 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருந்த ஸ்ரீவ் ஸ்மித்தை இரண்டாவது இடத்துக்கு தள்ளி முதலிடத்தைப் பிடித்தார்.

இதேவேளை, ஒருநாள், டெஸ்ட் தரவரிசைகளில் நியூஸலாந்து அணி தொடர்ந்தும் முதலிடத்தை தக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொரோனா நெருக்கடி காலத்தில் சிறுவர் தொழிலாளர்கள் அதிகரிப்பு

## அமைச்சர் நிமால் குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூலை3

கொரோனா வைரஸ் நெருக்கடி காலத்தில் சிறுவர்களைப் பல்வேறு தொழில் துறைகளில் வேலைக்கு அமர்த்துவது அதிகரித்துள்ளது எனத் தொழில் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதன் காரணமாக, சிறுவர்களைத் தொழில்களில் ஈடுபடுத்துவது மற்றும் சிறுவர் கடத்தலை முற்றிலுமாக தடைசெய்வதற்கான சட்டங்கள் இயற்றப்படும் எனவும் அவர் கூறினார்.

இதற்காக சிறுவர் மற்றும் தொழிலாளர் சட்ட ஒழுங்குமுறைகளில் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக பெண்கள், இளைஞர் மற்றும் சிறுவர்கள் வேலைவாய்ப்புச் சட்டத்தின் கீழ் ஆபத்தான தொழில் விதிமுறைகளை மறு ஆய்வு செய்ய வேண்டிய நேரம் இது எனவும் அவர் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களுக்கான யோசனைகளைத் தன்னிடம் சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சிறுவர் தொழிலாளர்களே பெற்றோரின் வறுமைக்குக் காரணம் என்று சிலர் விளக்கினாலும், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது மற்றும் பணம் சம்பாதிப்பதற்கு அவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டவிரோதமானது.

போதைப் பழக்கத்துக்கு அடிமையான பெற்றோர்கள் இந்தக் குற்றத்தைச் செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.

பண மோசடிக்குத் தமது குழந்தைகளைப் பயன்படுத்தும் பெற்றோரைக் கைதுசெய்து வழக்குத் தொடர வேண்டும்.

வீதிகளில் சுற்றித் திரியும் இவ்வாறான சிறுவர்கள் மீது வழக்கமான சோதனைகள் மற்றும் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்" - என்றார்.

# மாகாண தேர்தலை பிற்போடவே தேர்தல் முறைமை சீர்திருத்த நாடகம்

## அரசு மீது மு.கா. தலைவர் ஹக்கீம் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 02

**"மக்கள் மத்தியில் அரச எதிர்ப்பு அலை உருவாகியுள்ளதால் "தேர்தல் முறைமை சீர்திருத்தம்" என்ற போர்வையில் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான நகர்வுகளில் அரசு ஈடுபட்டு வருகின்றது. எனவே, தேர்தல் முறைமை மறுசீரமைப்புக்கு முன்னர் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும்."**

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. வலியுறுத்தினார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தம் தொடர்பில் சிறு கட்சிகளுக்கிடையிலான சந்திப்பொன்று ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ், அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி. ஆகியன இந்தச் சந்திப்பில் பங்கேற்றன.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய வருமாறு:-

"தேர்தல் முறைமை மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துரையாடுவதற்கு முன்னர் சிறு கட்சிகளுக்கிடையில் பொதுவானதொரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் இச்சந்திப்பு இடம்பெற்றது. தற்போதைய சூழ்நிலையில் அரசுமீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். எனவே, தேர்தல் முறைமை மறுசீரமைப்பு என்ற போர்வையில் மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கான நகர்வு இடம்பெறுகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

தேர்தல் முறைமை மறுசீரமைக்கப்படுவதற்கு முன்னர் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டும். அதேபோல இடம்பெறும் தேர்தல் மறுசீரமைப்பும் நீதியான முறையில் இடம்பெற வேண்டும்" - என்றார். (இ)

# மடு திருத்தலத்தின் திருச்சொரூப பவனி

மன்னார், ஜூலை 02

மடு திருத்தலத்தின் ஆடித் திருவிழா திருச்சொரூப பவனி இன்று நடைபெறவுள்ளது.

கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான மடு திருத்தலத்தின் ஆடித் திருவிழா, சுகாதார வழிகாட்டலுக்கமைய, தொடந்து நவ நாள் திருப்பலிகள் நடைபெற்று வந்தன. இந்நிலையில், இன்று திருவிழா திருச்சொரூப பவனி நடைபெறவுள்ளது.

காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், குருநாகல் மறைமாவட்ட ஆயர் ஹரல்ட் அன்டனி ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்டன் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் இணைந்து, திருவிழா திருப்பலியைக் கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுக்கவுள்ளனர். (இ)

# சிறுமி விற்பனை: மூவர் கைது!

கொழும்பு, ஜூலை 02

சிறுமி ஒருவரை கல்கிஸையில் இணையம் ஊடாக பாலியல் நடவடிக்கைகளுக்கு விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிஹிந்தலை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, சிறுமியின் தாய் உள்ளிட்ட 21 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# மரண அறிவித்தல்

மலர்வு 10 - 03 - 1958



உதிர்வு 29 - 06 - 2021

## அருணன் சின்னராசா

யாழ். வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Noisiel ஐ வதிவிடமாகவும் கொண்ட அருணன் சின்னராசா அவர்கள் கடந்த 29-06-2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற அருணன் – லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், தம்பு – காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும்,தேவகாருணி ( மாலா ) அவர்களின் பாசமிகு கணவரும், செல்வராசா, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

ரீகன், பிரியந்தி, ஜனார்திக், துவாரகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெனோயா, வசந்த், லாவண்யா, மாக்ஸ், மதி ஆகியோரின் அன்பு மாமனாரும்,மிலான், லியான், லீமா, லியா ஆகியோரின் அன்புப் பேரனும்,மஞ்சுளா, புஷ்பம், தவமணிதேவி, விநோதஸ் ( மோகன் ), மோகனதாஸ் ( தாசன் ) , பிரேமதாஸ் ( கண்ணன் ), காயத்திரி, மோகனா, சிவா, மைதிலி, வதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**ரீகன் - மகன்**
Mobile : +33781710019
**ஜனார்திக் - மகன்**
Mobile : +33781866825
**மோகன் - மைத்துனர்**
Mobile : +33698780919
**வசந்த் - மருமகன்**
Mobile : +33679856933
**தாசன் - மைத்துனர்**
Mobile : +33621118190

தகவல்
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

மலர்வு 24 - 03 - 1949



உதிர்வு 30 - 06 - 2021

## நடராஜா சின்னத்துரை

யாழ். மந்துவிலைப் பிறப்பிடமாகவும், கனடா Torontoவை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா சின்னத்துரை அவர்கள் நேற்று முன்தினம் (30-06-2021) புதன்கிழமை Torontoவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னதுரை – வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் சிற்றம்பலம் – தெய்வானை தம்பதியரின் மருமகனும், அன்னலக்சுமி அவர்களின் அன்புக் கணவரும், கனடாவைச் சேர்ந்த அனுசா அவர்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவராசா மற்றும் கனகம்மா, செல்லம்மா, சரஸ்வதி, இராஜேஸ்வரி, கலாவதி, பேபி, இந்திராணி, தியாகராசா, தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,செல்வானந்தம் செல்லையா அவர்களின் அன்பு மாமனாரும், சின்னாச்சிப்பிள்ளை (இலங்கை), சிவகாமிபிள்ளை (ஜேர்மனி), நடராசா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கிசோவன், சுவிமிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு :
Sunday, 04 Jul 2021 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

பார்வைக்கு :
Monday, 05 Jul 2021 9:00 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Monday, 05 Jul 2021 9:30 AM - 11:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம் :
Monday, 05 Jul 2021 11:00 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**செல்வன் - மருமகன்**
Mobile : +14165581548

தகவல்
**குடும்பத்தினர்.**

## எக்ஸ் - பிரஸ் பேர்ள்...

கடலில் கலந்ததால், இலங்கை கடற்கரை பகுதியில் கடந்த சில நாட்களாக சுமார் 200 இற்கும் மேற்பட்ட அரிய வகை கடல் வாழ் உயி ரினங்களான கடல் ஆமைகள், டொல் பின் உள்ளிட்டவைகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி வருகின்றன.

இலங்கையைச் சேர்ந்த கடல் ஆராய்ச்சி வல்லுநர்கள் இந்த தீ விபத்தால் ஏற்பட்ட கடல் மாசு இந்திய கடற்பரப்பிற்கு செல்ல அதிக வாய்ப்புள்ளதாக அறிவித்திருந்தனர். இந்நிலையில் 75 நாட்கள் மீன் பிடி தடைக்காலம் முடிந்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று மீன் பிடித்து விட்டு கரை திரும்பினர்.

இராமேஸ்வரம் மீனவர்கள் பிடித்து வந்த கணவாய், இறால், மீன்கள் உள்ளிட்டவைகளை மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானி ரம்யா தலைமையிலான விஞ்ஞானிகள் குழு ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வில் மீனவர்கள் பிடித்து வந்த மீன்களின் செதிள்களில் எண்ணெய் மாதிரிகள் ஏதேனும் உள்ளதா அல்லது மீன் வாய்களில் பிளாஸ்டிக் துகள்கள் உள்ளதா என்றும் அதே போல் இறால்கள், நண்டுகளின் உருவ அமைப்பு நீளம், அகலம் உள்ளிட்டவைகள் முழுமையாக ஆய்வு செய்து வருகின்றனர்.

ஆய்வின் முடிவு குறித்து விரைவில் அறிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும், இதுவரை நடத்திய ஆய்வில் இரசாயன கழிவுகள் ஏதும் தென்படவில்லை எனவும் விஞ்ஞானிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

## 1,815 பேருக்கு...

களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 60 ஆயிரத்து 904 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,888 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 27 ஆயிரத்து 840 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 944ஆக அதிகரித்துள்ளது. (இ)

## டெல்டாவை...

கொரோனா வைரஸ் பரவலின் தற்போதைய நிலை தொடர்பில் ஆராய்ந்த பின்னரே இந்த புதிய வழிகாட்டி வெளியிடப்படவிருப்பதாக மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தம்மிக ஜயலத் நேற்றிரவு தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் நிபுணர்கள் குழு ஒன்று கொரோனா பரவல் குறித்து அடுத்து வரும் தினங்களில் ஆராயவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆய்வுகளின் அடிப்படையிலேயே புதிய வழிகாட்டி தயாரிக்கப்படும்.

நாடு முழுவதிலும் நடைமுறையிலிருந்த பணயத் தடை கடந்த வாரம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் புதிய சுகாதார நடைமுறைகளை உள்ளடக்கிய வழிகாட்டி ஒன்று வெளியிடப்பட்டது. நாடு முழுவதற்கும் தனியாகவும் மேல் மாகாணத்துக்கு தனியாகவும் இது வெளியிடப்பட்டிருந்தது.

தற்போது கொழும்பின் பல பகுதிகளிலும் டெல்டா வகை வைரஸ் பரவியிருப்பது அடையாளம் காணப்பட்டிருக்கும் நிலையில், அரசாங்கம் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடைமுறைகளைக் கையாளாவிட்டால், பாரிய விளைவுகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் நேற்று எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்தப் பின்னணியிலேயே புதிய சுகாதாரக் கட்டுப்பாடுகளை உள்ளடக்கிய வழிகாட்டி ஒன்றை பொது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிடவிருக்கின்றார். மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடு மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் மேலும் சில புதிய கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தம்பாட்டி...

தக் கிராமம் முடக்கப்பட்டது.

நண்டு தொழிற்சாலையில் 70 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து 20 பேருக்கு நடத்தப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 9 பேருக்கு நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து ஏனையோருக்கு இன்று வெள்ளிக்கிழமை பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன.

இந்த நிலையில் நேற்று மாலை 6 மணி முதல் அந்தப் பகுதி முடக்கப்பட்டது. அந்தக் கிராமத்தில் இராணுவமும் பொலிஸாரும் எவரும் வெளியேறாதவாறு தடுத்துள்ளனர் என்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். (ஐ)

## மேலும் ஒருவர்...

யில் சிகிச்சை பெற்று வந்த நல்லூரைச் சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் சுகாதார விதிகளுக்கு அமைய மின் தகனம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் நேற்று நடத்தப்பட்ட அன்ரிஜென் பரிசோதனைகளில் 28 பேருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் நேற்று மாலை வரை 5 ஆயிரத்து 390 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## கொரோனா...

களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 120 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 43 பேரில் 27 ஆண்களும், 16 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 வயதுக்கு மேற்பட்டவர்களே உயிரிழந்துள்ளனர். அதற்கமைய உயிரிழந்த ஆண்களில் 24 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். மூவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். இதேவேளை, பெண்களில் 13 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். மூவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். (இ)

## நெடுந்தீவு...

சேர்ந்த சில்வர் ஸ்டார் மரியதாஸ் என்பவரே நேற்றுக் காலை மீன்பிடிக்கக் கடலுக்கு சென்ற நிலையில் நேற்றிரவு வரை கரை திரும்பவில்லை என உறவினர்களால் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது

யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் கடலுக்குச் சென்று கரை திரும்பாத நபர் தொடர்பான விவரம் சேகரிக்கப்பட்டு உரிய தரப்பினருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 03)

## இலங்கையில்...

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த ஐக்கிய இளைஞர் சக்தியின் நேற்றைய செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடு இப்போது நிதி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.

இலங்கை சர்வதேச கடன் சுமைகளால் வரலாற்றில் என்றுமில்லாத அளவு நெருக்கடி நிலையைச் சந்தித்துள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள இந்தப் பொருளாதார சரிவுக்குத் தீர்வு காண அரசு தயங்கக்கூடாது என்பது முதலாவது அடிப்படையாக இருந்தாலும், அரசிடம் நாட்டை மீட்கும் வேலைத்திட்டம் ஒன்றும் இல்லை" - என்றார். (இ)

# பெரும் நெருக்கடிக்குள் நாடு! 2029 வரை இந்நிலை தொடரும்!!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 02

பொருளாதார ரீதியாக நாடு பெரும் நெருக்கடி நிலையொன்றை சந்தித்துள்ளது, தற்போதுள்ள நிலையில் 2029 ஆம் ஆண்டு வரையில் யார் ஆட்சியில் இருந்தாலும் வருடத்திற்கு 450 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக செலுத்தியே ஆகவேண்டும்.

அடுத்த ஒரு வாரத்திற்குள் 100 கோடி அமெரிக்க டொலர்களை செலுத்தாவிட்டால் நாடே பெரும் நெருக்கடிக்குள் விழும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய கடன் நெருக்கடி நிலைமைகள் குறித்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இருந்தே நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பல தடைகள் ஏற்பட்டுள்ளன.

ஆனால், இதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது எமது அரசாங்கமோ காரணம் அல்ல. நாட்டின் பொருளாதார நெருக்கடி என்பது ஒருநாளில் வருவதும் அல்ல, நீண்டகாலமாக தீர்வு காணப்படாத பிரச்னைகள் இறுதியாக நெருக்கடியை உருவாகும்.

இன்று நாம் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு 2015 ஆம் ஆண்டு அரசாங்கமே காரணமாகும். முன்னைய ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியினால் விவசாயம் வீழ்ச்சி கண்டது, சகல ஏற்றுமதியும் நிறுத்தப்பட்டு இறக்குமதிக்காக நாடு திறக்கப்பட்டது.

131 ரூபாயில் இருந்த டொலருக்கான பெறுமதி நாம் ஆட்சியை மீண்டும் கைப்பற்றும் வேளையில் 181 ரூபாயாக உயர்ந்திருந்தது. நாட்டின் பொருளாதாரத்தை இனியும் முன்னெடுக்க முடியாது என்ற நெருக்கடி நிலையிலேயே ஆட்சி எமது கைகளுக்கு கிடைத்தது.

தற்போதுள்ள நிலையில் 2029 ஆம் ஆண்டு வரையில் யார் ஆட்சியில் இருந்தாலும் வருடத்திற்கு 450 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக செலுத்தியே ஆகவேண்டும். அவ்வாறான ஒரு நெருக்கடி நிலையில் நாம் உள்ளோம்.

அடுத்த வாரத்திற்குள் 100 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக நாம் செலுத்தியாக வேண்டும், இவ்வாறு மிகப் பெரிய தொகையை கடனாக வழங்குவது இலகுவான விடயமல்ல. அவ்வாறு கொடுக்காது போனால் நாம் வங்குரோத்து நாடாக மாறுவோம்.

இப்போதே நாம் வீழ்ச்சி கண்ட நாடாக மாறியுள்ளோம். கடன் பெரும் நாடுகளில் பட்டியலில் இனி வீழ்ச்சி காண எமக்கு இடம் இல்லை. நாம் வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் வேளையில் கடன் பத்திரமொன்றை கையாள வேண்டும், அத்தியாவசிய நுகர்வு பொருட்களாக இருந்தாலும், எரிபொருள், உரம், திரவங்கள் போன்ற பொருட்களாக இருந்தாலும், இயந்திரங்கள் போன்ற மூலதனப்பொருட்களாக இருந்தாலும் கடன் பத்திரம் ஒன்றை முன்வைக்க வேண்டும். இது இல்லாது எதனையும் இறக்குமதி செய்ய முடியாது.

தடுப்பூசிகளைக்கூட கொண்டுவர முடியாது. எனவே நாட்டின் நிலைமைகளை சகலரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

கட்சி அரசியலை தாண்டி நாடு குறித்து சிந்திக்க வேண்டும், நாடே நெருக்கடியில் இருக்கின்ற வேளையில் ஒரு தரப்பு மீது பொறுப்பை சுமத்தாது சகலரும் ஒன்றிணைந்து எழுச்சி பெற வேண்டும். நாம் இதுவரை எந்தவொரு கடனையும் திரும்ப செலுத்தாது கைவிட்டதில்லை. நாட்டில் இருக்கின்ற சகல பணத்தையும் சுரண்டியேனும் அடுத்த வாரம் இந்த கடன் தொகையை செலுத்திவிடுவோம், செலுத்தவில்லை என்றால் நாம் பாரிய நெருக்கடியில் விழுவோம் என்றார்.

# "சட்டவிரோத மணல் அகழ்வால் உவராகும் உமையாள்புரம்!"

கிளிநொச்சி, ஜூலை 02

கிளிநொச்சி - கண்டாவளை - உமையாள்புரம் பிரதேசத்தில் அதிகளவில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆனையிறவு கடல்நீரேரிக்கு அண்மையாக உள்ள இந்தக் கிராமத்தில் பெரும்பகுதி உவர் நிலமாக உள்ளது. இந்தநிலையில் மணல் அகழ்வு நடவடிக்கை மேலும் உவராக்கத்தை ஏற்படுத்தும் என்று மக்கள் கூறுகின்றனர்.

கரைச்சி பிரதேச சபையின் கழிவு அகற்றும் பகுதியில் சட்டவிரோதமாக உழவு இயந்திரங்கள் மூலம் அகழப்படும் மணல் சேமிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து டிப்பர்களில் எடுத்துச் செல்லப்படுவதாகவும், தொடர்ச்சியாக இவ்வாறு இடம்பெற்று வருவதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக அடிக்கடி வாள் வெட்டு சம்பவங்களும், குழு மோதல்களும் இடம்பெறுகின்றன. இதனைக் கட்டுப்படுத்துமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் எவரும் இதுவரை கண்டுகொள்ளவில்லை எனவும் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, உமையாள்புரம் கிராமத்தின் எதிர்காலம் கருதி அதிகரித்துள்ள சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த உரிய தரப்பினர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தவறின் முழுக் கிராமமும் இன்றும் ஒரு சில வருடங்களில் உவர் நிலமாக மாறிவிடும் என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

## தன்னைத் தானே...

பொலிஸ் நிலைய வாயிலில் உள்ள காவலரணில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கியை எடுத்து தனக்குத்தானே தலையில் சுட்டுக்கொண்ட இவர் ஆபத்தான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை அனுமதிக்கப்பட்ட போதும் அங்கு அவர் உயிரிழந்தார்.

இவரது உயிரிழப்பு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

## யாழ்ப்பாணத்தில்...

ஆரம்பமானது.

இதன்படி, நேற்று வரையான நான்கு நாட்களில் 41 ஆயிரத்து 771 பேர் கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை, கிராம அலுவலகர் பிரிவு ரீதியாக வழங்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெறத் தவறியவர்கள் நாளை சனிக்கிழமை தமது, பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு Eelanadu

# ஒழுங்கு விதியை மீறுகின்ற பொலிஸாருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பணிப்புரை

**கொழும்பு, ஜூலை 02**

**இலங்கையில் ஒழுங்கு விதிகளை மீறி, குற்றச் செயல்களில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.**



குற்றச் செயல்களில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளுக்கு மாத்திரம் இன்றி, அவர்களைக் கண்காணிக்கும் உயர் அதிகாரிகளுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அண்மைக்காலமாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலரின் முறைகேடான செயற்பாடுகளால், பொலிஸாரின் நற்பெயர் பாதிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நெலுவ பொலிஸ் நிலையத்தில் சிறுமி ஒருத்தியைச் துஷ்பிரயோகம் செய்த சம்பவம், பொலிஸார் பஸ்ஸில் எரிபொருள் திருடிய சம்பவம், வரகாபொலையில் இடம்பெற்ற சம்பவம் போன்றவற்றுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார்.

சில பொலிஸ் அதிகாரிகளின் இவ்வாறான செயற்பாடுகளால் முழு பொலிஸ் சேவையிலும் பொதுமக்கள் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்படும் எனவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கவலை வெளியிட்டுள்ளார். (இ)

# முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தம்: ஜம்இய்யதுல் உலமா கடும் அதிருப்தி!

கொழும்பு, ஜூலை 02

முஸ்லிம் தனியார் சட்ட திருத்தம் தொடர்பான அமைச்சரவை தீர்மானம் இஸ்லாமிய மார்க்க, சிவில் நிறுவனங்களுடைய ஆலோசனைகளை கருத்திற்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களின் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அதன் அதிருப்தியையும், கவலையையும் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் கருத்துக்கள் உள்வாங்கப்படாத அமைச்சரவையின் தீர்மானங்கள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யும்படியும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக்கொண்டுள்ளது.

முஸ்லிம் தனியார் சட்ட திருத்தம் இஸ்லாமிய மார்க்க அடிப்படைகளை கவனித்து, நாட்டு பிரஜைகளின் உரிமைகளையும் மதித்து, எவருக்கும் அநீதி இழைக்கப்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்த ஒரு பொறிமுறை மூலம் சட்ட திருத்தம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்படி அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, அரசையும் நீதி அமைச்சரையும் கேட்டுக்கொண்டுள்ளது. (இ)


## வேலையாட்கள் தேவை

யாழ் கொக்குவிலில் புதிதாக ஆரம்பிக்க உள்ள பல்பொருள் வாணிபத்திற்கு

1. போட்டோகொப்பி அடிக்கத் தெரிந்த தமிழ் ஆங்கில Typing தெரிந்தவர்கள்.
2. A/L வர்த்தகத்தில் சித்தியடைந்த பெண் ஊழியர்களும் தேவை.
3. Graphical Designing தெரிந்தவர்கள்

ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 076 855 4077**


# வியாழேந்திரனுக்கு முன்னாலேயே அவரை விமர்சித்தார் சாணக்கியன்

## அமைச்சர் பிரசன்ன கலந்துகொண்ட கூட்டத்தில்

மட்டக்களப்பு, ஜூலை 02

மட்டக்களப்பில் உள்ள ஆளும் கட்சி சார்ந்த அரசியல்வாதிகளின் நிலையானது குரங்கின் கையில் பூமாலை கிடைத்தது போன்று உள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.



அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று மட்டக்களப்புக்குச் சென்றிருந்த போது, இடம்பெற்ற கூட்டத்திலேயே சாணக்கியன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனும் கலந்துகொண்டிருந்தார்.

கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பில் இரண்டு எம்.பிக்கள் உள்ள போதும், அங்கு நடைபெறும் முக்கிய கூட்டங்களுக்கு தங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை என்று சாணக்கியன் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் சுட்டிக்காட்டினார்.

"நாங்கள் கூட்டங்களுக்கு அழைக்கப்படாமையால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் குறித்து முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு எங்களுக்கு சந்தர்ப்பங்கள் கிடைப்பது இல்லை. எங்களையும் கூட்டங்களுக்கு அழைத்தால் நாங்களும் முன்மொழிவுகளை முன்வைக்கலாம்" என்றும் அவர் கூறினார்.

இதேவேளை நேற்றைய கூட்டத்தில் சாணக்கியன் எம்.பி. பல திட்ட முன்மொழிவுகளை அமைச்சரிடம் கையளித்தார். (இ)









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை



1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நான் ,நடுவுலகொஞ்சம் பக்கத்தகாணோம் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10

**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-தமிழர் தேசிய அரசியல். பாகம்-02



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்